# மன்னா


## கிறிஸ்மஸ் புதுவருடச் சிறப்பிதழ்



‘‘இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்’’ (மத்தேயு 2:11)

## நல்வாழ்த்துக்கள் நவில்கின்றோம்!


மன்னா பத்திரிகையின் வாசகர்களே, எழுத்தாளர்களே, விநியோகஸ்தர்களே, அபிமானிகளே உங்கள் அனைவரையும் நாம் நெஞ்சார நினைக்கின்றோம். அன்போடு நன்றி கூறுகின்றோம். அமைதியின் அரசராம் இயேசு கொண்டுவந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்துகின்றோம்; ஆசிக்கின்றோம்; செபிக்கின்றோம். உங்களுக்கு எமது அன்பும் அருளும், அமைதியும் நிறைந்த கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்களை நவில்கின்றோம்!

**நிறைந்த ஆசீருடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன், மன்னா ஆசிரியர்**
**மற்றும் மன்னா அலுவலகப் பணியாளர்கள்**

“வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார்” (யோவான் 1:14) என்ற இறைவாக்கு இக்காலத்தில் நமக்கு நம்பிக்கையின் வார்த்தையாகத் தரப்படுகின்றது.

‘இம்மானுவேல்’ என்ற பெயரைத் தாங்கிய நமது புதிய ஆயர் ‘கடவுள் நம்மோடு இருக்கிறார்’ என்ற நம்பிக்கையின் செய்தியுடன் நம் மத்தியில் வருகின்றார். எனவே அவரை நாம் அனைவரும் முழு மனதுடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்போம்.

உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களையும் இறை ஆசீரையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



# மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்

- யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் வளர்ந்த - தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்.

- இந்தியாவின் தூத்துக்குடி கத்தோலிக்க கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் இருந்து வருகின்றவர்.

- மூத்த சகோதரரைக் குருவாகவும், இரண்டு மூத்த சகோதரிகளை அருட்சகோதரிகளாகவும் கொண்ட- ஒரே குடும்பத்தில் நான்கு பேரை இறைபணியாளர்களாகக் கொண்ட - அழைத்தலின் விழைநிலமான கத்தோலிக்க குடும்பத்தில் இருந்து வருகின்றவர்.

- உதவிப் பங்குத் தந்தை, பங்குத்தந்தை, குருமட விரியுரையாளர், உப அதிபர், அதிபர், மறைக்கோட்ட முதல்வர், ஆயரின் பதில் குரு, துணை ஆயர் என திருச்சபையில் பல்வேறு பணிப்பொறுப்புக்களை வகித்த அனுபவம் வாய்ந்தவர்.

- நிறைந்த கல்விப் புலமையும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் சிறந்த பாண்டித்தியமும் பெற்றவர்.

- அனைத்திற்கும் மேலாக மிகுந்த எளிமையும், தாழ்மையும் கொண்ட அன்புநிறைந்த இறை ஊழியர்!

**அன்புடன் வரவேற்கின்றோம்!**

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பேரருட்திரு. கலாநிதி விடலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை மன்னா மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றது. இவர் இதுவரை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களில் ஒருவராகப் பணியாற்றிவந்தார்.

கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி வத்திக்கான் நேரம் பகல் 12.00 மணிக்கு வத்திக்கானிலும், இலங்கை நேரம் மாலை 4.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வேளையில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக பேராலய மணிகளும் மறைமாவட்டத்தில் உள்ள ஏனைய ஆலய மணிகளும் ஒலித்தன.

கடந்த இரண்டரை வருடங்களாகப் புதிய ஆயருக்காகச் செபித்த மன்னார் மறைமாவட்ட இறைமக்களின் செபங்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் இப்போது இறைவன் தனது திருவுளப்படி நல்லதோர் ஆயரைத் தந்துள்ளார். எனவே இறைவனுக்கு நன்றிகூறுவோம்! புதிய ஆயரின் விரிவான வாழ்க்கைக் குறிப்புகளும், நிழற்படங்களும் 6ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன. புதிய ஆயர் நியமனம் மற்றும் புதிய ஆயரின் குணவியல்புகள் தொடர்பான கட்டுரை 10ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

## புதிய ஆயருக்கான வரவேற்பும், அவருடைய பணிப்பொறுப்பு ஏற்பு நிகழ்வும்

### டிசம்பர் – 30ஆம் திகதி

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கான வரவேற்பும் அவருடைய பணிப்பொறுப்பு ஏற்பு நிகழ்வும் (Installation) எதிர்வரும் டிசம்பர் 30ஆம் திகதி இடம்பெறும். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மன்னார் நகரின் பிரதான பாலத்தில் இருந்து வரவேற்புப் பவனி ஆரம்பமாகி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தை வந்தடையும். அதனைத் தொடர்ந்து காலை 10.15 மணியளவில் பேராலயத்தில் புதிய ஆயர் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணிப்பொறுப்பை ஏற்கின்ற நிகழ்வு திருச்சபையின் விதிகளுக்கு அமைய இடம்பெறும். இந்நிகழ்வில் இலங்கையின் அனைத்து ஆயர்களும், கொழும்பு மற்றும் ஏனைய மறைமாவட்டங்களில் இருந்து பல குருக்கள், இறைமக்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



**மன்னாவின் அன்பளிப்பு :**

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயருடைய வர்ணப் படத்தை மன்னா பத்திரிகைப் பணியகம் மன்னா வாசகர்களுக்கு அன்பளிப்பாக வழங்குகின்றது. நீங்கள் பெறும் இம்மாத மன்னா பத்திரிகையினுள் இப்படம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். - மன்னா ஆசிரியர்





# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## - கிறிஸ்மஸ் பற்றிய செய்திகள் -

தொகுப்பு : திரு. M.S.A. ஒஸ்வேல்ட்,, சிரேஷ்ட உப அதிபர் (ஓய்வு நிலை) – கல்பொத்த வீதி, கொழும்பு –13

### நத்தார்



இது இயேசுவின் பிறப்பை நினைவுபடுத்தும் பெருவிழாவாகும். நத்தார் என்பது எல்லாம் வல்ல இறைவனின் மனித அவதாரம் ஆகும். உலகையெல்லாம் படைத்தாளும் இறைவன், மானிடராகிய எம்மை இழிநிலையிலிருந்து மீட்பதற்காக மனுவுரு எடுத்த மாபெரும் நிகழ்வே நத்தார் பண்டிகையாகும்.


### கிறிஸ்மஸ் வரலாறு




உரோமய மன்னனான அவுரேலியன், பால்மியுரா மன்னனை வெற்றிகொண்டதன் நினைவாக கி.மு. 274 டிசம்பர் 25ஆம் நாளன்று தனது நாட்டிற்கு சூரியனைக் கடவுளாக அறிக்கையிட்டு (Sun God) ஆண்டுதோறும் சூரியப் பிறப்பு விழாவை கொண்டாடினான்.

கிறிஸ்தவர்களுக்கு மதச்சுதந்திரம் கிடைத்தபோது, நீதியின் ஆதவனான இறைவனின் (Son of God) மகனான இயேசுவின் பிறப்பு தினத்தை டிசம்பர் 25ஆம் திகதி கொண்டாட முடிவு செய்தனர். இதன் அடிப்படையில் முதலாவது கிறிஸ்மஸ் விழா கி.பி.336ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. கிறிஸ்துக்குப்பின் 350ஆம் ஆண்டு பப்பரசர் யூலியஸ் டிசம்பர் 25ஆம் திகதியை உத்தியோகபூர்வமாக கிறிஸ்மஸ் தினமாக அறிவித்தார்.

### திருவருகைக்காலம் (நத்தாருக்கான ஆயத்தம்)




கத்தோலிக்க திருச்சபையானது தன் திருவழிபாட்டு ஆண்டினை திருவருகைக்காலத்துடன் ஆரம்பிக்கின்றது. அதாவது மார்கழி 25க்கு முன்வரும் 4 ஞாயிற்றுக்கிழமைகளை உள்ளடக்கிய காலம் திருவருகைக்காலமாகக் கொள்ளப்பட்டு, நத்தார் தினத்திற்காக தம்மை ஆன்மீக ரீதியில் ஆயத்தப்படுத்த ஒவ்வொரு கத்தோலிக்க கிறிஸ்தவனையும் திருச்சபை அழைத்து நிற்கின்றது.

### திருவருகைக்கால வளையம்

**(Advent wreath)**




திருவருகைக்காலத்தை நினைவுகூரத் தற்போது நமது தேவாலயங்களில் திருவருகைக்கால வளையம் வைக்கப்படுவது வழக்கமாகியுள்ளது. இந்த வளையமானது பச்சை இலைகளால் அலங்கரிக்கப்பட்டு, அதில் 5 மெழுகுதிரிகள் வைக்கப்படுகின்றன. இம்மெழுகுதிரிகளில் 3 ஊதா நிறத்திலும் (மனமாற்றம்) ஒன்று இளம்சிவப்பு நிறத்திலும் (மகிழ்ச்சி) மற்றொன்று வெள்ளை நிறத்திலும் (தூய்மை) காணப்படும்.

### நத்தார் கீதங்கள்



நத்தார் கீதமானது இயேசுக்கிறிஸ்து பிறந்தபோது வானதூதர்கள் பாடிய வாழ்த்தொலியை ஞாபகப்படுத்துகின்றது. இன்று நத்தார் கீதங்களானது கிறிஸ்மஸ் கரோல் என்று அழைக்கப்படுவதோடு, இந்தக் கரோல் இசையானது இயேசுவின் பிறப்பைப்பற்றிய நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது.

### நத்தார் குடில்



நத்தார் குடிலை முதல் முதலில் வடிவமைத்தவர் அசிசி நகரின் புனித பிரான்சிஸ் ஆவார். இயேசுவின் பிறப்பின் பொருள் உணர்ந்து கொண்டாடுவதற்காக 1223ஆம் ஆண்டு அவர் ஆரம்பித்த இந்த முயற்சி காலப்போக்கில் நத்தார் பாரம்பரியங்களில் ஒன்றாக மாறிவிட்டது.

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### மார்கழி

03. புனித சவேரியார் திருவிழா - சிலாவத்துறை, கீளியன்குடியிருப்பு, புளியங்குளம், மன்னார் பனித சவேரியார் ஆண்கள், பெண்கள் பாடசாலை தினம், யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விழா
06. தூய நீக்கிலார் ஆலயத் திருவிழா - பட்டித்தோட்டம்.
08. தூய கன்னி மரியாளின் அமல உற்பவம் - கடன் திருநாள்
- அ.ம.தி குருக்களின் விழா
- அமல உற்பவ அருட்சகோதரிகள் விழா
- தூய வெற்றிநாயகி திருவிழா - பேசாலை
13. தூய லூசியா திருவிழா - பள்ளிமுனை
25. கிறிஸ்து பிறப்புப் பெருவிழா - கடன் திருநாள்
31. திருக்குடும்பத் திருவிழா - திருக்குடும்ப அருட்சகோதரிகள் விழா.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

### நத்தார் மரம்





நத்தார் மரத்தினால் அலங்கரிப்பது ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்டது. பச்சைமரம் இறைமகன் இயேசுவில் கிடைக்கும் அழியா பசுமையான வாழ்வைக் குறிக்கும், அலங்கார பந்துகள் வான்வெளிக் கோள்களாகும். நட்சத்திரம் - பெத்தலேகம் ஆகும். மேலும் நத்தார் மரத்தை அழகூட்டப்பட்ட நிறபல்புகள் மற்றும் சோடினைகளால் அலங்கரிப்பார்கள்.

### நத்தார் தாத்தா





நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித நீக்கலஸ் என்னும் ஆயரின் வாழ்வே நத்தார் தாத்தாவின் ஆரம்பமாகும். சிறிய ஆசியாவில் ஆயராக இருந்த இவர் மக்களிடம் மிகவும் அன்பு கொண்டார். சிறப்பாகச் சிறுவர்களிடம் மிகவும் பாசம் கொண்ட அவர் இரவு வேளைகளில் வறிய மக்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்குச் சென்று பிள்ளைகளுக்கு மிகவும் விருப்பமான சிறுபொருட்களை வீடுகளின் யன்னல் வழியாக உள்ளே எறிந்துவிட்டு செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

இவர் இறந்தபின் மார்கழி மாதம் 6ஆம் திகதி இவரது நினைவு நாளாகத் திருச்சபை கொண்டாடி வந்தது. இதனால் மார்கழி மாதத்தில் புனித நிக்லஸ் விண்ணுலகிலிருந்து வந்தும்கூடத் தமக்குத் தேவையானவற்றைத் தருவார் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடம் பரவி இருந்தது. இதன் பின்னணியிலிருந்து தோன்றியதே நத்தார் தாத்தாவின் பாரம்பரியம் ஆகும்.

எனினும் தற்கால உலகில் நல்நோக்கத்தோடு உருவெடுத்த இவ்வடிவம், நுகர்வுக் கலாசாரத்தில் வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுவது கவலைக்குரிய விடயமாகும். அனேக இடங்களில் மார்கழி 25ஆம் திகதி (இரவு 12 மணிக்கு) பட்டாசுகள் கொழுத்தி நத்தாரை வரவேற்பது வழக்கமாகிவிட்டது.

### நத்தார் பரிசுப்பொருட்கள்



இயேசுவின் பிறப்பினுடாக இறைவன் தன் ஒரே மகனையே நமக்குப் பரிசாகத் தருகின்றார். ஆகவேதான் நத்தார்க் காலத்தில், பொருத்தமான பல பரிசுப்பொருட்களை நாங்கள் பரிமாறிக்கொள்கின்றோம்.

### உண்மை உறைக்கும் — கமிலஸ்





### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# பாராமுகமாக இருப்பதே வறியோருக்கு எதிரான பெரும் பாவம்

## நவம்பர் – 19, உலக வறியோர் நாளில் திருத்தந்தையின் மறையுரை









கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று உலக வறியோர் தின நிகழ்வுகளில் உரோம் நகர் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் 6,000 இற்கும் அதிகமான வறியோர் பங்குபற்றியிருந்தனர். அவர்களுக்கு திருத்தந்தை திருப்பலி நிறைவேற்றி மறையுரை ஆற்றினார். அதில் உதவி தேவைப்படும் நிலையிலுள்ள நம் சகோதர சகோதரிகள் குறித்து பாராமுகமாக இருப்பதே இவ்வறியோருக்கு எதிரான மிகப்பெரும் பாவம் என்று திருதந்தை பிரன்சிஸ் கூறினார்.

மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தீமையைக் குறித்த கவலை அதிகரித்துவரும் அதேவேளை அது குறித்து எதுவும் செய்யாமல் பாராமுகமாக இருக்கும் நிலையும் அதிகரித்து வருகிறது என்று சுட்டிக்காட்டினார். வறியோருக்கு உதவ வேண்டியது திருஅவையின் நற்செய்திக் கடமையாகிறது. ஏனெனில் அவர்களே திருஅவையின் உண்மையான செல்வங்கள் எனவும் தன் மறையுரையில் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# வேப்பங்குளம் பங்கில் உள்ள உக்கிளான்குளம் திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் புதிய கட்டடம் திறப்பு



வவுனியா மறைக்கோட்டத்தின் வேப்பங்குளம் பங்கு எல்லைக்குட்பட்ட உக்கிளான்குளம் என்னும் இடத்தில் திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் புதிய கட்டடம் கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரால் திறந்துவைக்கப்பட்டது.

இவ்விடத்தில் ஏற்கனவே இருந்த இல்லக் கட்டிடம் போரின் வடுக்களைத் தாங்கி பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதாக இருந்த நிலையிலேயே இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருச்சிலுவைக் கன்னியர்களின் இலங்கை மாகாணத் தலைவி அருட்சகோதரி கிளயா பஸ்தியாம்பிள்ளை, வேப்பங்குளம் பங்குத்தந்தை அருட்திரு. லக்ஸ்ரன் டி சில்வா, திருச்சிலுவைக் கன்னியர்கள், வவுனியா அமல மரித்தியாகிகள் சபைக் குருக்கள் மற்றும் ஏனைய துறவற சபைகளைச் சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# காணாமற் போனோர் தொடர்பாக நிலையான தீர்வு தேவை

## கனேடியத் தூதுவரிடம் யாழ் ஆயர்

காணாமற் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாக நிலையான தீர்வினை எடுக்க கனேடிய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மைக்கின்னன் அவர்களிடம் யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கனேடியத் தூதுவருக்கும் யாழ் ஆயருக்குமான சந்திப்பு கடந்த நவம்பர் 29ஆம் திகதி யாழ் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஆயர் இவ்வாறு வலியுறுத்தினார்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களின் உறவுகளுக்கு அரசாங்கம் காலத்தை இழுத்தடிக்காது உரிய பதிலை வழங்கி தீர்வினை முன்வைப்பதற்கு கனடா அரசு இலங்கைக்கு அழுத்தத்தை வழங்க வேண்டுமெனக் குறிப்பிட்ட ஆயர், யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகள் உட்பட வேலைவாய்ப்பின்றி இருப்போருக்குப் பயன்தரக்கூடிய வகையில் கனேடிய அரசு யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவற்றுக்குப் பதிலளித்த கனேடியத் தூதுவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தாம் நேரடியாகவும், ஐ.நா. சபை மூலமும் இலங்கை அரசுக்கு தொடந்து அழுத்தங்கள் வழங்கி வருவதாகவும், தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் தாம் அக்கறையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# வவுனியா மறைக்கோட்டம் தரணிக்குளம் பங்கில் உள்ள சுந்தரபுரம் கிராமத்தில் புதிய ஆலயம்





வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள தரணிக்குளம் பங்கின் சுந்தரபுரம் என்னும் கிராமத்தில் புதிதாக புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இப்புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்தார். அன்றைய நாளில் ஆலயத் திருவிழாவின் தொடக்கநாள் திருப்பலியையும் ஆயர் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

புதிய பங்காகிய தரணிக்குளம் பங்கில் கப்புச்சின் துறவற சபைக் குருக்களின் பணி பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் சுந்தரபுரம் கிராமம் பம்மைமடுப் பங்கிற்குள் இருந்தபோது அன்று பம்மைபடு பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. இ. அகஸ்ரின் இவ்வாலயத்திற்கான காணியைப் பெற்று அடிக்கல்லையும் நாட்டியிருந்தார். இன்றைய தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. ஆரோக்கியசாமி அவர்களின் நெறிப்படுத்தலில் இந்தப் புதிய ஆலயத் திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது.

## தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு ‘கலையருவி’ அமைப்பு நடாத்திய இறுவட்டுப் பாடல் போட்டி முடிவுகள்

தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவி நடாத்திய பல்வேறு போட்டிகளில் ஒன்றாகிய இறுவட்டுப் பாடல் (திறந்த) போட்டியில் பின்வருவோர் விருதுக்கு உரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

**முதலாம் இடம் : ரஞ்சன் சம்சன் ஹன்சன் கோல்டன், வவுனியாப் பங்கு.**
**இரண்டாம் இடம் : பிரான்சிஸ் றெக்ஷன், வவுனியாப் பங்கு.**
**மூன்றாம் இடம் : திருமதி. சுபாஸ்சந்திரன் டெனிஸ்ரீன், தூய யோசவ்வாஸ் நகர் பங்கு.**

போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் வெற்றி பெற்றவர்களுக்கும் கலையருவியின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## அருட்சகோதரி யோசப்பின் இறைபதம்

திருக்குடும்ப கன்னியர் சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரி யோசப்பின் சந்தியாப்பிள்ளை அவர்கள் கடந்த டிசம்பர் 3ஆம் திகதி இறைபதமடைந்தார். யாழ் கரவட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தன் இறுதிக் காலத்தில் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் இருந்தார்.

தன் இறைபணிக்காலத்தில் இவர் பல்வேறு இடங்களில் கல்விப் பணி ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய நல்லடக்க ஆராதனைகள் இளவாலை கன்னியர் இல்லத்தில் இடம்பெற்றது. அன்னாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் அமைதி அடையச் செபிப்போம்.

## தியாக்கோன்களுக்கான பணித்தளங்கள்

கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் தியாக்கோன்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் பின்வரும் பங்குகளுக்கு பணிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்:

அருட்சகோதரர் மரிசால் சதாஸ்கர் - முத்தரிப்புத்துறை
அருட்சகோதரர் றோக்நாதன் மேரி பஸ்ரியன் - பள்ளிமுனை
அருட்சகோதரர் மடுத்தீன் தேவராஜன் - மன்னார் பேராலயம்
அருட்சகோதரர் வேதநாயகம் ரஞ்சன் சேவியர் - வவுனியா

**Holy Cross School of Health Science**

**Diploma in Nursing (02 years)**
**Certificate in Nursing (9 months)**

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்களும் க.பொ.த சாதாரண தரம் கற்றவர்களும் தங்களது சுயவிபரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 31.12.2017
அனுப்பவேண்டிய முகவரி :
திருச்சிலுவை தாதியர் பாடசாலை,
இல. 767/4 கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 077-1159391/ 021-2222423

## இரக்கம் என்பது பலவீனமல்ல, அது அவசியமான ஒன்று

### திருத்தந்தை பிரான்சிஸ்

சாலைப் போக்குவரத்துத் துறையிலும், இரயில் துறையிலும் பணியாற்றும் காவல்துறையினரை கடந்த நவம்பர் 20ஆம் திகதி திருப்பீடத்தில் சந்தித்து உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிவரும் பணிகளுக்கு தன் நன்றியைத் தெரிவித்தார்.

ஓட்டுனர்கள் தங்கள் பொறுப்புணர்வை மறந்து செயல்படும் வேளையில், அவர்களின் வீதி மீறல்களை ஆய்வு செய்வதும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதும், விபத்துக்களின்போது உதவுவதும் எனப் பல்வேறு பணிகளை ஆற்றும் போக்குவரத்து காவல்துறையினர், சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வுக் கல்வியை மக்களுக்கு ஊட்டுவதிலும் கவனம் செலுத்த வேண்டும் எனத் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

இரயிலில் பயணம் செய்வோருக்கு பாதுகாப்பு, விபத்துத் தடுப்பு, குற்றங்கள் நிகழாதிருக்கக் கண்காணிப்பு போன்றவைகளில் ஈடுபடும் இரயில் காவல் துறையினருக்கும் தன் பாராட்டுக்களை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இரக்கத்தை ஒரு பலவீனமாகக் கருதாமல், மக்களை இரக்கத்துடன் அணுகவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான போராட்டம் எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பதையும், சாலைப் போக்குவரத்துத்துறை மற்றும் இரயில் துறையில் பணியாற்றும் காவல்துறையினருக்கு வழங்கிய உரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை சுயநலப்போக்கு, அநீதி, பாராமுகம் போன்றவற்றிலிருந்து வெளிவர ஒவ்வொருவரும் தொடர்ந்து முயலவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

### இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்
### மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகிய நாம்
### மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# திருவருகைக்காலத் திருமடல் - 2017



**இயேசுக் கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,**

**முன்னுரை**

கிறிஸ்துவின் பிறப்பு விழாவுக்கு நம்மை ஆயத்தம் செய்யும் திருவருகைக் காலத்தில் நாம் நுழைந்துள்ளோம். வரலாற்றில் மனிதராகப் பிறந்த கடவுளின் மகனாகிய இயேசுவின் முதல் வருகையைச் சிறப்பிக்கவும், உலக முடிவில் அவர் மாட்சியுடன் வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கவும் நம்மைத் தயார் செய்கின்ற காலமாக இத்திருவருகைக் காலம் நமக்குத் தரப்பட்டிருக்கின்றது.

கிறிஸ்மஸ் விழா என்பது கடவுளின் அன்பைக் கொண்டாடும் விழா. “நாம் வாழ்வு பெறும் பொருட்டு, கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது” (1 யோவான் 4:9) என்ற இறைவார்த்தை இந்த உண்மைக்குச் சான்று பகர்கின்றது. “கடவுள் நம்மீது கொண்ட பேரன்பின் வெளிப்பாடே மனுவுடலேற்பு” என்ற புனித அகுஸ்தீனாரின் வார்த்தைகள் இந்த உண்மைக்கு இன்னும் வலுச்சேர்ப்பதாக உள்ளது. எனவே கடவுளின் அன்பையும் அவருடைய உடன் இருப்பையும் இன்னும் ஆழமாக இந்தக் காலத்தில் உணர்ந்து இறைமகன் இயேசுவின் வருகைக்கு நம்மை ஆயத்தம் செய்வோமாக!

**புதிய ஆயரை வரவேற்போம்**

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராகப் பணிபுரிந்துவந்த மேதகு லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி வத்திக்கான் நேரம் பகல் 12.00 மணிக்கும் இலங்கை நேரம் மாலை 4.30 மணிக்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வேளையில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக நமது ஆலய மணிகள் ஒலிக்கப்பட்டன.

கடந்த இரண்டரை வருடங்களாக புதிய ஆயருக்காகக் காத்திருந்து செபித்த நமக்கு தற்போது இறைவன் தமது திருவுளப்படி நல்லதோர் ஆயரைத் தந்துள்ளார். இதற்காக இறைவனுக்கு நன்றிகூறுவோம். இம்மாதம் 30ஆம் திகதி (30.12.2017) புதிய ஆயர் தமது பணிப்பொறுப்பினை சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொள்ள இருக்கிறார். அன்றைய நாளில் அவரைச் சிறப்பாக நம்மத்தியில் வரவேற்போமாக!

**மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு**

கடந்த நவம்பர் மாதம் 17ஆம் 18ஆம் திகதிகளில் மன்னார் மறைமாவட்ட வருடாந்த மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு இடம்பெற்றது.

இவ்வருடம் நாம் சிறப்பித்த தூய யோசவ்வாஸ் ஆண்டை அடுத்த வருடமும் தொடர்வதெனவும் தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பணி வாழ்வில் பொதுநிலையினர் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததால் அடுத்த ஆண்டில் சிறப்பாகப் பொதுநிலையினரை மையப்படுத்தி மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணிச் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் குருக்களின் செனற் சபை தீர்மானித்திருந்தது. இதற்கு அமைவாகவே இந்த மாநாடு இடம்பெற்றது. “தூய யோசவ்வாஸ் அர்ப்பண ஆண்டு II” என்பது அடுத்த ஆண்டுக்கான பொதுத் தலைப்பாகவும், “பொதுநிலையினரின் அழைப்பும் பணிகளும் உருவாக்கமும்” என்பது அடுத்த ஆண்டுக்கான சிறப்பு மையப்பொருளாகவும் அமைந்திருக்கும்.

பொதுநிலையினருடைய அழைப்பின் மேன்மை, மகத்துவம், பொதுநிலையினருடைய பணிகளின் அவசியம், முக்கியத்தும், அவர்களுடைய உருவாக்கத்தின் தேவை போன்ற விடயங்கள் இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டன. உரைகள், குழு ஆய்வுகள் மூலம் பல்வேறு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டன. இந்தக் கருத்துக்கள், ஆலோசனைகள் மேலும் ஆராயப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்டு மறைமாவட்டத்தின் திட்டங்களாக அவை விரைவில் பங்குகளுக்கு அனுப்பிவைக்கப்படும். இந்த மறைமாவட்டத் தீர்மானங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பங்கும் தமது பங்குச் சூழல், வசதி, வாய்ப்பு போன்றவற்றிற்கு ஏற்ப தமது பங்குத் திட்டத்தை வகுத்து அடுத்த ஆண்டில் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். இந்த விடயத்தில் பங்குத்தந்தையோடு சேர்ந்து துறவியர், பொதுநிலைத் தலைவர்கள் போன்றோர் சிறப்பாக ஒத்துழைப்பார்களாக.

பொதுநிலையினரின் அழைப்பு, பணிகள், உருவாக்கம் குறித்து திருச்சபையின் ஏடுகளில் தெளிவாகவும், அழுத்தம் திருத்தமாகவும் பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவை தொடர்பான பரந்து விரிந்த விழிப்புணர்வு இந்த ஆண்டில் வழங்கப்படவேண்டும்.

“எந்தெந்த இடங்களில் பொதுநிலையினரால் மட்டுமே திருச்சபை மண்ணுலகிற்கு உப்பாகத் திகழ முடியுமோ, அந்தந்த இடங்களிலும் சூழ்நிலைகளிலும் திருச்சபையை உடனிருக்கச் செய்வது” பொதுநிலையினர்தான். இதுவே பொதுநிலையினரின் தனி அழைப்பு என இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ‘திருச்சபை’ என்ற ஏடு (எண். 33) கூறுகின்றது. “பொதுநிலையினர் திருச்சபையிலும், உலகிலும் நிறைவேற்றும் பணிகளை திருநிலையினர் அங்கீகரித்து மேம்படுத்த வேண்டும். பொதுநிலையினரும் விழிப்புணர்வு பெற்று, திருநிலையினருடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்” எனத் திருச்சபையின் கொள்கைத் திரட்டு (எண் 37) கூறுகின்றது.

**நிறைவாக**

“வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார்” (யோவான் 1:14) என்ற இறைவாக்கு இக்காலத்தில் நமக்கு நம்பிக்கையின் வார்த்தையாகத் தரப்படுகின்றது. ‘இம்மானுவேல்’ என்ற பெயரைத் தாங்கிய நமது புதிய ஆயர் ‘கடவுள் நம்மோடு இருக்கிறார்’ என்ற நம்பிக்கையின் செய்தியுடன் நம் மத்தியில் வருகின்றார். எனவே அவரை நாம் அனைவரும் முழு மனதுடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்போம்.

உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களையும் இறை ஆசீரையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரை இன்றும் என்றும் நமக்குக் கிடைப்பதாக! நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,
மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,
மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர்

**குறிப்பு : இம்மடலை டிசம்பர் மாதம் 10ஆம் திகதி திருவருகைக் காலத்தின் இரண்டாவது அல்லது மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அன்று மறைமாவட்டத்தின் எல்லாத் திருப்பலி வேளைகளிலும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் இறைமக்களுக்கு வாசித்துத் தெளிவுபடுத்தவும்.**







வரலாற்றில் ஏற்கனவே நடந்தேறிய இயேசுவின் முதல் வருகைக்கும், இனி நடக்கவிருக்கின்ற இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் நம்மை தயார் செய்வோம்!

## டாவின்சி வரைந்த இயேசுவின் ஓவியத்தை ஏலத்தில் வாங்கிய சவுதி இளவரசர்



உலகப் புகழ் பெற்ற லியனார்டோ டாவின்சி வரைந்த இயேசுவின் ஓவியத்தை சவூதி அரோபியாவின் இளவரசர்களில் ஒருவரான *பாதர் பின் அப்துல்லா பின் பார்காள் அல் சவுத்* என்பவர் வாங்கி இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மோனலிஸா ஓவியத்தை வரைந்தவர் உலகப் புகழ் பெற்ற லியனார்டோ டாவின்சி, சால்வேடர் முன்டி என்ற தலைப்பில் வரைந்த இயேசு ஓவியத்தை சமீபத்தில் ஏலத்துக்கு விடும் பிரபல நிறுவனமான லண்டன் ஷோத்பீ ஏலத்தில் விட்டது. அந்த ஓவியம் 450.3 மில்லியன் டொலருக்கு ஏலம் போனதுடன், அதை அதிக விலைக்கு வாங்கியவர் யார்? என்ற விவரம் வெளியே தெரியாமல் இருந்ததால் அதை வாங்கியவரை அறிய உலக அளவில் ஆர்வம் எழுந்தது. இந்த ஓவியத்தை சவூதி அரேபியாவின் இளவரசர்களில் ஒருவரான *பாதர் பின் அப்துல்லா பின் முகமது பின் பர்காள்* அல் சவுத் வாங்கி இருப்பதாக ஆவணங்களைக் காரணம் காட்டி அமெரிக்க பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. மேலும், இத்தகவலை ஷோத்பீ ஏல மையத்தின் செய்தி தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கும்போது, பொதுவாக பொருளை விற்பவர்கள் மற்றும் வாங்குபவர்கள் விரும்பும் பட்சத்தில்தான் அவர்கள் குறித்த தகவல் வெளியிடப்படும். ஆனால் இளவரசர் கடைசி நேரத்தில்தான் தன்னைப்பற்றிய ஆவணங்களை வெளியிட்டார் என்றார் ஒருவர்.

தற்போது இந்த ஓவியம் அபுதாபியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள லாவ்ரே அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இயேசுவின் ஓவியத்தை மிக அதிக விலைக்கு முஸ்லிம் இளவரசர் ஒருவர் வாங்கியிருப்பது சர்வதேச அளவில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

## அமல உற்பவ மாதா துறவற சபைச் சகோதரிகள் சவுத்பார் காணியில் தமது இல்லத்திற்கான ஆரம்பப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்

இந்தியாவின் மதுரையைத் தமது பணித்தள மையமாகக் கொண்டு மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் அமல உற்பவ மாதா துறவற சபை அருட்சகோதரிகள் (C.I.C. Sisters) தாம் அமைக்கவிருக்கின்ற புதிய பணி இல்லத்திற்கான நிலப்பரப்பிலே கடந்த டிசம்பர் 3ஆம் திகதி தமது ஆரம்பப் பணிகளைத் தொடக்கியுள்ளனர்.

மன்னார் நகரின் தென்முனையில் கடற்கரையோரமாக சவுத்பார் என்னும் இடத்தில் இருக்கின்ற நிலப்பரப்பிலேயே இவர்களுடைய இந்தப் பணி இல்லம் அமையவிருக்கின்றது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார், சாந்திபுரம் பங்குத் தந்தை நேரு அடிகளார், அமல உற்பவ மாதா துறவற சபையின் மன்னார் இல்லத் தலைவி அருட்சகோதரி சவிரியம்மா, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அன்னை மரியாவின் திருவுருவச் சுருபம் ஆசீர்வதிக்கப்பட்டு அரியணை ஏற்றப்பட்டதோடு, தென்னமரக் கன்றுகளும் நடப்பட்டன.





## செபமாலை கன்னியர் துறவற சபையின் புதிய நிர்வாகம்

செபமாலை கன்னியர் துறவற சபையினரின் (Rosarian Sisters) பொது அமர்வு கடந்த 11.10.2017 தொடக்கம் 28.10.2017 வரை யாழ் சுண்டுக்குளி வளர்பிறை உளவியல் ஆற்றுப்படுத்தல் மையத்தில் அருட்தந்தை எட்வின் வசந்தராஜா (அமதி) அடிகளாரின் நெறிப்படுத்தலின்கீழ் நடைபெற்றது.

அப்பொது அமர்வில் அருட்சகோதரி மேரி கெலன் ஜெயந்தி அவர்கள் சபையின் தலைவியாக மீளவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தியாவை சேர்ந்த அருட்சகோதரி மேரி மாக்கிறேற் அவர்கள் பதில் தலைவியாகவும், அருட்சகோதரிகள் மேரி எலிசபேத், மேரி சீத்தா, மேரி லிசம், மேரி மாசில்லா ஆகியோர் ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய பணி சிறக்க செபிப்போம்.

### அடுத்த இதழ்
### பொங்கல் சிறப்பிதழாக வெளிவரும்

மன்னாவின் ஜனவரி மாத இதழ் தைப்பொங்கல் சிறப்பிதழாக வெளிவரும். டிசம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# புதிய ஆயர் மன்னாருக்கு வருகைதந்து குருக்கள் துறவியரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்








மன்னார் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி மன்னாருக்கு வருகைதந்து மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் மற்றும் இருபால் துறவியரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்த புதிய ஆயரை ஆயர் இல்லத்தின் பிரதான நுழைவாயிலில் வைத்து மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மறைமாவட்டக் குருமுதல்வர் அ. விக்ரர் சோசை அடிகளார் மற்றும் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் வரவேற்றனர். புதிய ஆயரின் மோதிரத்தை முத்திசெய்து, முத்தமிட்டு அவரை அன்புடன் வரவேற்றனர்.

பின்னர் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்திலே இறை வழிபாடு இடம்பெற்றது. வழிபாட்டின் முடிவில் புதிய ஆயர் அனைவருக்கும் ஆசீர் வழங்கினார். தொடந்து ஆயர் இல்லத்தின் கேட்போர் கூடத்திலே புதிய ஆயருக்கும் அருட்பணியாளர்களுக்குமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

புதிய ஆயர் அவர்கள் உரையாற்றும்போது தமக்கு இந்தப் புதிய நியமனம் அறிவிக்கப்பட்ட சூழ்நிலை தொடர்பாக விளக்கினார். அத்துடன் பல்வேறு வகையில் வளர்ந்துவரும் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணி செய்வதில் உள்ள சவால்களையும் அவர் சுட்டிக்காட்டினார். இக்கலந்துரையாடலின் நிறைவில் திருச்சபையின் சட்ட ஒழுங்கின்படி புதிய ஆயரின் பணிப்பொறுப்பேற்கும் நிகழ்வு (Installation) தொடர்பாக ஆராயப்பட்டது.

ஆயர் இல்லத்தில் குருக்களைச் சந்தித்த பிற்பாடு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மாலை 3.00 மணிக்கு மறைமாவட்டத்தில் பணிபுரியும் இருபால் துறவியரைச் சந்தித்தார். இச்சந்திப்பைத் தொடர்ந்து புதிய ஆயர் அவர்கள் கொழும்புக்குப் பயணமானார்.

# மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் கல்வி உதவித் திட்டம் - 2017




மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினால் மன்னார் மாவட்டத்திலுள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பிற்கென கடந்த 16 வருடங்களாக ம.து.ம.ச. அளப்பெரிய சேவையினை ஆற்றிவருகின்றது. ஒவ்வொரு தவணைதோறும் இம்மாணவர்களின் கல்வித் தேர்ச்சியறிக்கை எம்மால் பார்வையிடப்பட்டு மாணவர்களுக்கும் அவர்களது பாதுகாவலர்களுக்கும் உரிய ஆலோசனைகளும், ஏற்ற உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாணவர்களுக்கான உதவிகளை ம.து.ம.ச.வுடன் சேர்ந்து வழங்கிவரும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நன்கொடையாளி திரு.மெஸவுஸ் (Mr.Muis) என்பவர் ஒவ்வொரு வருட இறுதியிலும் இம்மாணவர்களைச் சந்திப்பது வழக்கம். அவர் இவ்வருடமும் கார்த்திகை மாதம் 11ந் திகதி மன்னாருக்கு வருகைதந்து மாணவர்களைச் சந்தித்து, கற்றல் நடவடிக்கைகளைக் கேட்டறிந்து பரிசில்கள் வழங்கி, கலைநிகழ்வுகளையும் கண்டுகளித்து, மதிய உணவிலும் ஒன்றுசேர்ந்து மகிழ்ந்தார்.

விசேடமாக இவ்வருடம் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இம்மாணவர்களின் இல்லங்களுக்கு ம.து.ம.ச. அங்கத்தவர்கள் விஜயம்செய்து அவர்களின் வீட்டுநிலவரங்களையும், கற்றல் நடவடிக்கைகளையும் பார்வையிட்டு அவர்களுக்கு பெறுமதியான உலர் உணவுப்பொதியும், ஏற்ற உடைகளும் வழங்கப்பட்டது ஓர் சிறப்பான நிகழ்வாகும்.

அத்துடன் எமது திட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிச் செல்லும் 25 மாணவர்கள் வருடாந்தம் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள 15 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

# அளவக்கைப் பங்கு ஆலயத்தில் புதிய நற்கருணைப் பேழை ஸ்தாபகம்

அளவக்கை தூய கார்மேல் மாதா ஆலயம் புதிதாக கட்டப்பட்டுக்கொண்டு இருக்கும் ஆலயமாகும். இந்த வேளையில், பீடவேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கான பீடம் எமது அளவக்கைப் பங்குத்தந்தை அருள்திரு. லீ. சுரேந்திரன் றெவல் அடிகளாரால் - அவரது குடும்பத்தில் இறந்தோர் நினைவாக - அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து எமது பங்குத்தந்தையின் அறிவுக்கூர்மையான சிந்தனையாலும் ஆக்கபூர்வமான செயற்பாட்டினாலும் அளவக்கை ஆலய மக்களின் ஒத்துழைப்புடனும் எமது வாழ்வின் ஊற்றும் உறைவிடமுமாக இருக்கின்ற நற்கருணைநாதர் உறைவிடம் அமைக்கப்பட்டது. இது 10 அடி உயரமும் 5 அடி அகலமும் கொண்ட பேழையாக இயேசுவின் திருஉருவத்திற்குள் இந்த நற்கருணைப்பேழை வடிவமைக்கப்பட்டது. இதனை பொலநறுவையைச் சேர்ந்த பிறமத சகோதரர் திருவாளர் திலக் அவர்கள் சிறப்பாக வடிவமைத்துத் தந்தார்.

இதனை ஆசீர்வதித்து இதற்குள் முதல்தடவையாக நற்கருணை வைக்கும் நிகழ்வு கடந்த 26.11.2017 அன்று அதாவது கிறிஸ்து அரசர் பெருவிழா அன்று நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருள்பணி. விக்ரர் சோசை அடிகளார், முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும், கற்கடந்தகுளப் பங்குத்தந்தையுமான அருட்பணி. மாக்கஸ், அருட்பணி. தவராஜா, அருட்பணி. எமில் எழில்ராஜ், அருட்பணி. நியூட்டன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். முதலில் நற்கருணை பேழை ஆசீர்வதிக்கப்பட்டு நற்கருணை வைக்கும் நிகழ்வை குருமுதல்வர் நடாத்தினார். இதனைத் தொடர்ந்து திருப்பலி ஆரம்பமானது. இறுதியில் குருமுதல்வருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சகோதரர் திலக் அவர்களுக்கும் பொன்னாடை பேர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் அனைத்தையும் அளவக்கைப் பங்குத்தந்தை அருட்திரு. சுரேந்திரன் றெவ்வல் அவர்கள் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

- **தகவல் : த. யூடிற்றா.**

மன்/ கற்கிடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலை மாணவி

# தேசிய மட்டத்தில் சாதனை



மன்/ கற்கிடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 3இல் கல்வி பயிலும் செல்வி சிறீதரன் அக்ஷா பெர்னாண்டோ கர்நாடக சங்கீதப் போட்டியில் பிரிவு 1இல் தேசிய மட்டத்தில் 1ஆம் இடம் பெற்று பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதற்கு வழிப்படுத்திய அதிபர். திரு. S. பிரான்சிஸ் அவர்களையும் போட்டிக்குரிய பாடலை இயற்றி இசை வழங்கி வயலின் வாசித்த ஆசிரியை திருமதி. G. கத்தறின் அவர்களையும் ஆர்மோனியம் வாசித்த ஆசிரியை திருமதி. நீலா பெர்னாண்டோ அவர்களையும் தபோலா வாசித்த பாடசாலைப் பணியாளர் திரு. M. இன்பஜெபநிசாந் அவர்களையும் பாடசாலைச் சமூகம் பாராட்டி நிற்கின்றது. சாதனை படைத்த அக்ஷாவை பாடசாலைச் சமூகம் மற்றும் கிராமத்துடன் இணைந்து மன்னாவும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட

# குருக்கள் துறவியருக்கான புதிய கல்லறைத் தோட்டம்





மன்னார் மறைமாவட்டத்தில் இறைபதமடைந்த குருக்கள் துறவியருக்கான புதிய கல்லறைத்தோட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னர் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இறந்துபோன குருக்கள் துறவியரின் உடல்கள் மன்னார் பொது சேமக்காலையிலேயே புதைக்கப்பட்டுவந்தன. ஆயினும் இறைபதமடைந்த குருக்கள் துறவியருக்கான புதிய கல்லறைத் தோட்டத்தை அமைக்கவேண்டிய தேவை பெரிதும் உணரப்பட்டது. எனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார் பொதுச் சேமக்காலைக்கு அருகில் பெறப்பட்ட புதிய இடத்தில் இந்தக் கல்லறைத் தோட்டம் அமைக்கப்பட்டு அண்மைக் காலங்களில் இறந்த குருக்கள் துறவியரின் உடல்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டன.

ஏற்கனவே மன்னார் பொதுச் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டிருந்த 6 அருட்பணியாளர்களினதும், 5 அருட்சகோதரிகளினதும், 4 அருட்சகோதரர்களினதும் உடல்கள் கடந்த டிசம்பர் 4ஆம் திகதி தோண்டப்பட்டு அதற்குள் இருந்த எஞ்சிய உடற்பாகங்கள் புதிய இடத்தில் அமைக்கப்பட்ட கல்லறைத் தோட்டத்தின் புதைகுழிகளில் வைக்கப்பட்டன.

ஏற்கனவே சட்டரீதியாக மன்னார் நீதிமன்றத்தில் பெற்ற அனுமதியின்படி மன்னார் நீதிபதி அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட்டன. மன்னார் நீதிமன்றத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள், மன்னார் நகரசபைச் செயலாளர், நகரசபைப் பணியாளர்கள், பொலிசார், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர், ஏனைய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், உறவினர்கள் எனப் பலர் அவ்வேளையில் அங்கு கூடியிருந்தனர்.

புதிய இடத்தில் அமைக்கப்பட்ட புதைகுழிகளுக்குள் இந்த உடல்கள் வைக்கப்படமுன்னர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிகாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்த உடல்களையும், புதைகுழிகளையும் ஆசீர்வதித்தார்.

# மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் வாழ்க்கைக் குறிப்புகளும், கடந்தகால நிழற்படங்களும்

**பிறப்பு :** 20.05.1948 (யாழ்ப்பாணம்)
1951 - 1955 : வசிப்பிடம் - கிராண்பாஸ் பங்கு,
1955 இலிருந்து : வசிப்பிடம் - கொட்டாஞ்சேனை பங்கு

**பெற்றோர் :**

**தந்தை :** விசுவாசம் சேவியர் பஸ்ரியன் பர்னாந்து (பொதுச் சேவைகள் திணைக்களத்தின் பொறியியலாளர், பின்னர் சாமுவேல் அன்ட் சான்ஸ் நிறுவனத்தின் பொறியியலாளர்)

**தாய் :** ஞானசொரூபி பர்னாந்து (குடும்பப் பெண்). தாயும் தந்தையும் இறைபதம் அடைந்துவிட்டனர். ஆயரே குடும்பத்தின் எட்டாவது பிள்ளையும் கடைக்குட்டியுமாவார்.

**சகோதரர்கள்**
1. காலஞ்சென்ற திரு. அன்ரன் பெனாண்டோ
2. காலஞ்சென்ற அருட்தந்தை ஜோ பெனாண்டோ (யாழ் மறைமாவட்டம்)
3. திரு. ஜோன் பெனாண்டோ

**சகோதரிகள்**
1. திருமதி. றீட்டா வாஸ்
2. அருட்சகோதரி டிலெக்ட்டா (அ.கா)
3. அருட்சகோதரி ஜோயெல்லா (அ.கா)
4. திருமதி மிக்கேலின் விக்டோரியா

**ஆரம்பக் கல்வி**
க.பொ.த சாதாரண தரம் வரை 1953 - 1964
புனித பெனடிக்ற் கல்லூரி, கொட்டாஞ்சேனை, கொழும்பு. 13.
12 வயது முதல் கொட்டாஞ்சேனை விகராதிபதியிடமிருந்து சிங்களத்தையும் பயின்றார்.

**சிறிய குருமடம்**
1965ஆம் ஆண்டு எமது கர்தினால் மல்கம் றஞ்சித் அவர்களுடன் சிறிய குருமடத்தில் சேர்ந்தார். அப்புத்தளை 'ஹாவடன்'' குருமடத்தில் சில மாதங்கள் இருந்தார்.

**தேசிய குருமடத்தில் மெய்யியல்**
- ♦ 1966ஆம் ஆண்டு தேசிய குருமடத்தில் இணைதல்
- ♦ ஒரு மாதத்திற்குப் பின்னர் மெய்யியல் டிப்ளோமாவைத் தொடங்கி மூன்று வருடங்கள் பயின்றார்.

**உரோமாபுரியில் இறையியல்**
- ♦ 1969ஆம் ஆண்டு ஆவணி மாதமளவில் இறையியல் கற்க உரோமாபுரி சென்று மறைப்பரப்புக் கல்லூரியில் இணைந்தார்.
- ♦ 1972ஆம் ஆண்டு B.Th எனும் பட்டத்தை இறையியலில் ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

**குருவாகத் திருநிலைப்படுத்தப்படல்**
- ♦ 06.01.1973 ஆம் ஆண்டு: திருத்தந்தை 6ஆம் பவுல் ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**ஒழுக்கவியலில் முதுமாணிப்பட்டம்**
♦ ஐப்பசி 1974ஆம் ஆண்டு: ஒழுக்கவியலில் முதுமாணிப் பட்டத்தைப் (Licentiate in Moral Theology) பெற்றார்.

**பங்குத்தளப் பணிகள் :**
தலுகம உதவிப் பங்குத்தந்தை (இருப்பிடம் - சப்புகஸ்கந்த)
1975ஆம் ஆண்டு: ஹன்வெல்ல உதவிப்பங்குத்தந்தை (இருப்பிடம் - வக)
1976 : கொட்டாஞ்சேனை - உதவிப்பங்குத்தந்தை கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் பொறுப்புக் குருவாய் கடமையாற்றினார்.

**தேசிய குருமட விரிவுரையாளர்**
- **1978**ஆம் மாசி மாதம் - தேசிய குருமடத்தில் விரிவுரையாளர் மற்றும் குழுப்பொறுப்பாளர். ஒழுக்க மெய்யியல் மற்றும் அடிப்படை ஒழுக்க இறையியலை கற்பித்தார். ஞானப்பிரகாசர் தமிழ் கழகத்தின் பொறுப்பாளரும் பல மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டியாகவும் செயற்பட்டார்.

**கலாநிதிப்பட்டம்**
- **1981**ஆம் ஆவணி மாதம் அமெரிக்காவின் வொசிங்டனில் அமைந்துள்ள கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம்பெறப் பயணமானார். அதேவேளை அங்கு வொசிங்டனில் அமைந்துள்ள புனித அன்னம்மாள் ஆலயத்திலும், நியூயோர்க்கில் அமைந்த 'ஹய்லண்ட் பால்ஸ்'' பங்கிலும் பணிபுரிந்தார்.
**1987** ஐப்பசி மாதம் ஒழுக்க இறையியல் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றார். மேலும் பேராசிரியர் சாள்ஸ் கரனின் கண்காணிப்பில் "கத்தோலிக்க ஒழுக்க இறையியல் அடிப்படையில் இலங்கையின் சனத்தொகை நியதிகளை ஆராய்தல்'' எனும் தலைப்பில் தனது ஆய்வு நூலையும் எழுதி முடித்தார்.

**மீண்டும் தேசிய குருமடத்தில் பல்வேறு பணிகள்**
- **1987** ஐப்பசி தொடக்கம் மீண்டும் தேசிய குருமடத்தில் தமது சேவையைத் தொடர்ந்தார். ஒழுக்க மெய்யியல் மற்றும் இறையியல் பயிற்றுவித்தார். நூலகப் பொறுப்பாளர், குழுப்பொறுப்பாளர், ஞானப்பிரகாசர் தமிழ்கழகப் பொறுப்பாளர், பல மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டி.

**தேசிய குருமட உதவி அதிபர்**
- **1989 - 1991** குருமட உதவி அதிபர்.


குருப்பட்டத்தின்போது திருத்தந்தையுடன்


குருவாகியபின் பெற்றோருடன்




குருவாகி நாடுதிரும்பியபின் முதல் திருப்பலி


குருவாகியபின் தந்தையுடன்


முதல் திருப்பலியின்போது தாய் காணிக்கை வழங்குதல்


முழுக் குடும்பத்துடன் குட்டி இம்மானுவேல்


அம்மா, அப்பா, குருவான அண்ணன், அருட்சகோதரிகளான இரண்டு அக்காமாருடன் இளம் குரு இம்மானுவேல் அடிகளார்

**தேசிய குருமட அதிபர்**
- **1991 - 1998** குருமட அதிபர். மேலும் இறுதி வருடங்களில் ஆயர் மன்ற இறையியல் குழுவின் அங்கத்தவராகச் செயற்படுதல். அதேவேளை உயர் மறைமாவட்டத்தில் குருக்களின் பிரதிநிதியாகச் செயற்பட்டார்.

**ஆய்வு ஆண்டு :** 1998 ஆவணி - 1999 புரட்டாதி வரையான காலப்பகுதியின் அமெரிக்காவின் நியூயோர்க் பிராந்தியத்தில் ரொக்வில் சென்டர் மறைமாவட்டத்தின் பங்குத்தளமொன்றில் பணியாற்றினார். மேலும் ஹேஸ்டிங் நிலையத்தில் ஆய்வு நிபுணராக இருந்தார். மீண்டும் 1999 புரட்டாதி மாதத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட ஆய்வு நிலையத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அந்நிலையத்தினூடாக கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டு ஜுபிலி ஆண்டில் உயர் மறைமாவட்டத்தின் எட்டு வெவ்வேறு இடங்களில் எட்டுக் கண்காட்சிகளை ஒழுங்கமைத்தவர் என்ற பெருமையும் ஆயர் அவர்களையே சாரும்.

**மீண்டும் பங்குகளில் :** 2001 ஆனி - 2002 ஐப்பசி பங்குத்தந்தை - தில்லந்துவ, நீர்கொழும்பு மறைவட்டாரத் தலைவர், போலவளான மறைவட்டாரம் 2002 ஐப்பசி 2009 தை பங்குத்தந்தை - மொரட்டுவ புனித செபஸ்தியார் ஆலயம் மறைவட்டாரத் தலைவர் : மொரட்டுவ மறைவட்டாரம் (2004) மார்கழி வரை)


**ஆயர் பதில் குருவாக :** 2004 மார்கழி மறைக்கல்வி மற்றும் குடும்ப அப்போஸ்தலிக்க பணிகளுக்கான ஆயர் பதில்குருவாக நியமிக்கப்பட்டார்.

**துணை ஆயராக நியமனம் :** 2011 கார்த்திகை 28 - கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயராக நியமிக்கப்பட்டார்.

**துணை ஆயராக திருநிலைப்படுத்தப்படல்**
2012 மாசி 11 - ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**மன்னார் ஆயராக நியமனம்**
2017 கார்த்திகை 22 - மன்னார் ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

**மன்னார் ஆயராகப் பணிப்பொறுப்பு ஏற்பு**
2017 மார்கழி 30 - மன்னார் ஆயராகப் பொறுப்பேற்கவுள்ளார்.





உரோமாபுரியில் குருமட மாணவனாக!

காலஞ்சென்ற கர்தினால் தோமஸ் கூரே ஆண்டகையுடன் அருட்சகோதரரான இம்மானுவேல் மற்றும் அருட்சகோதரரான மல்கம் றஞ்சித் (இன்றைய கர்தினால்)


துணை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டபோது கர்தினால் மல்கம் றஞ்சித் மற்றும் ஏனைய ஆயர்களுடன்.

கிறிஸ்மஸ் சிறப்புக் கட்டுரை



# கிறிஸ்து பிறப்பு விழா

## நேர்மறை முரண்பாடுகளை நேர்மறை சக்தியாக்கும் விழா





### முதலாக

இங்கிலாந்து அறிஞர் செஸ்டர்டன் கிறிஸ்தவ சமயம் பற்றி பேசும்போது Religion of Paradoxes (முரண்பாடு மெய்ம்மை) என்று சொல்வார். அதாவது முரண்பாடுகளைக் கொண்டது அல்ல, ஆனால் தோற்றத்தில் மட்டும் வெறும் முரண்பாடுகள் போல் இருந்தாலும் உண்மையான அர்த்தத்தில் நேர்மறை பொருள்களையே வெளிப்படுத்தும் ஒரு சமயம். “கொடுக்கும்போது நீ பெறுகின்றாய்”, “இழக்கின்றபோது நீ அடைகின்றாய்” என்பன போன்றவைகள் நேர்மறை முரண்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுக்கள். இவை போன்ற முத்தான கருத்துக்களை முதன் முதலாக உலகிற்குக் கொடுத்த ஒரு நபர் இயேசு; கொடுத்த ஓர் இயக்கம் கிறிஸ்தவம். இது பெருமைப்பட வேண்டிய ஒன்று. நேர்மறை முரண்பாடுகள் கிறிஸ்தவத்திற்கு ஆடையோ, அழகோ அல்ல, அதுதான் கிறிஸ்தவத்தின் அடையாளமே.

நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா யேசுவின் பிறப்பை அறிமுகப்படுத்தும், அழகுபடுத்தும் ஒன்று. அந்த முதல் தோற்றமே பிறப்பே கிறிஸ்தவத்தின் அடையாளமாகிய நேர்மறை முரண்பாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அங்கே தோன்றும் நபர்கள், பொருள்கள் இவைகள் நமக்கு பல அர்த்தங்களைக் கொடுப்பதன் மூலமாக கிறிஸ்தவத்தின் தனித்தன்மையும் அடையாளமும் கிறிஸ்து பிறப்பிலிருந்தே தொடங்குகிறது என்பதைப் புரிந்துகொள்வோம்.

### உலகக் குடும்ப விழா

இயேசுவின் பிறப்பை வெளிப்படுத்தும் கிறிஸ்மஸ்/ கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒன்று. கிறிஸ்தவரும் பிறரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இவ்விழாக் கொண்டாட்டத்தில் சேர்ந்துகொள்வர். துன்பங்கள் மறைந்து இன்பங்கள் நிறைய விரும்பும் ஒரு விழா. சோகங்கள் இருந்தாலும் இவ்விழாக் கொண்டாட்டத்துக்காக சோகங்களை தற்காலிகமாக ஒதுக்கி வைக்கும் அளவுக்கு இது ஒரு மகிழ்ச்சியின் விழா.

சில நாடுகளில் பனியிலும், குளிரிலும் இன்னும் சில நாடுகளில் வெப்பமான சூழலிலும் கொண்டாடப்படுகிறது. குளிரும், வெப்பமும் கொஞ்சமும் மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் குறைக்காத ஒரு விழா. இவ்விழா தரும் சில வாழ்வுச் சிந்தனைகளை மனதாக்குவோம்; மனிதமாக்குவோம்.

### கிறிஸ்தவக் கடமை... கிறிஸ்மஸ் கடமை

கிறிஸ்து பிறப்பு விழா கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் ஒன்று. கடவுள் உலகில் வருகிறார் என்பது மட்டுமல்ல, மனிதனாக பிறக்கிறார் என்பதால் மனிதர் ஒவ்வொருவருக்கும் அது ஒரு பெரிய ஆச்சரியம், ஆனந்தம். காரணம், கடவுளே நம்மைபோல் ஆகிறார் என்றால் நாம் கடவுளாக மாற வேண்டும். கடவுள் நம் இடத்தை எடுத்துக்கொள்ளும்போது நாம் கடவுள் இடத்தை எடுத்துக்கொள்வோம். பொதுவாக நாம் “என்ன நாம் மனிதர்கள் தானே” என்று எண்ணியிருந்தால் அந்த எண்ணத்தில் இனி மாற்றம் வேண்டும். அந்த மாற்றம் என்னவெனில் கடவுளே மனிதனாகப் பிறந்த பிறகு மனிதர்களாகிய நம்முடைய மாண்பு உயர்கிறது. நம்மிடம் இருக்கக்கூடிய எல்லாவிதமான தாழ்வுநிலைகளும் எண்ணங்களும் மறைகின்றன. மனிதர்களிடத்தில் நாம் உருவாக்கும் வேறுபாடுகள் எல்லாம் செயற்கைத்தனங்கள், போலிகள், வெளிவேடங்கள் என்பதை உணர்வோம்.

மனிதர்களின் சமநிலையை வலுப்படுத்தும் இரு முக்கிய காரணங்கள் கிறிஸ்தவத்தில் உண்டு என்றால், ஒன்று ‘மனிதன் கடவுளின் சாயல்’ என்பது. இன்னொன்று, ‘கடவுள் மனிதனாகப் பிறந்தது’. இவைகள் வலுவாக இருக்கும்போது, கிறிஸ்தவம்தான் இனி இந்தப் பூமியில் தைரியமாக எல்லாவிதமான ‘தாழ்நிலை’ மாற முதன் முயற்சிகளை உருவாக்க வேண்டும். எனவே கடவுளும் மனிதனும் சந்தித்து சமமாகும்போது நாம் உருவாக்கிய செயற்கைத்தனமான அசமத்துவம் மறைய வேண்டும். இது கிறிஸ்தவ கடமை மட்டுமல்ல, கிறிஸ்மஸ் கடமையாகும்.

### கிறிஸ்து பிறப்பில் ஈடுபட்ட நபர்களும் நேர்மறை அடையாளங்களும் :

#### 1. வானதூதர்கள் - அச்சம்

இடையர்கள் வயல்வெளியில் இரவெல்லாம் தங்கள் கிடையை காவல் காத்துக்கொண்டிருந்தார்கள் (லூக் 2:8). வானதூதர்களைக் கண்ட இடையர்கள் அச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டனர். காரணம், இடையர்கள் வெகு சாதாரணமானவர்கள். கடவுளோ, கடவுளின் பிரதிநிதிகளோ தங்கள் வாழ்க்கையில் தோன்றுவார்கள் என்று கனவிலும் எண்ணாதவர்கள். கிடைத்த வாழ்க்கையின் பெரும் பகுதியை தங்கள் மண்ணோடும் மந்தைகளோடும் செலவு செய்தவர்கள். தங்களைத் தாண்டிய மேலான நிலைகளை எண்ணிப்பார்க்காதவர்கள். பார்வையும் பாதையும் மந்தை, மக்கள், இரவு என்றே சொந்தமாக்கிக் கொண்டவர்கள். ஆனால் இப்போது சந்திக்க முடியாதவர்கள் என்று எண்ணப்பட்ட இரு துருவங்கள் ஆண்டவர் இயேசுவின் பிறப்பில் சந்தித்துக்கொண்டன. வானதூதர்களும் இடையர்களும் சந்திக்கின்றார்கள். சந்திக்க முடியாத துருவங்களின் சந்திப்பு கிறிஸ்து பிறப்பு விழா.

#### 2. அஞ்சாதீர்கள்.. மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி

அதுவரைக்கும் வயல், மந்தை, இரவு இவைகளோடு பழக்கப்பட்டவர்கள். எனவே இரவின் திகிலுக்கும், நண்பகலின் கொடிய தாக்குதலுக்கும் அஞ்சாதவர்கள். இரவின் மிருகங்கள் பகலின் பாய்ந்துவரும் சிங்கங்கள் எதுவாகிலும் அஞ்சாதவர்கள். ஆக, பார்த்தவைகள் பழக்கப்பட்டவர்களுக்கு இடையர்கள் அஞ்சவில்லை. ஆனால் இன்று இதுவரை பார்க்காத வானதூதர்கள் இவர்களின் அச்சத்திற்கு அடிப்படையாகிவிட்டனர்.

எனவே தங்கள் வருகையே அச்சத்திற்கு காரணம் என்பதால் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள் வானதூதர்கள். ஆகவே ‘அஞ்சாதீர்கள்’ (லூக் 2:10) என்ற உறுதியான வார்த்தையால் அச்சம் தவிர்க்கின்றனர். என்ன அழகான ஒரு பொறுப்புணர்வு! அச்சம் மட்டுமல்ல, மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை கொடுத்ததன் மூலம் அச்சம் இருந்த இடத்தை மகிழ்ச்சியால் நிரப்பும் ஓர் அழகான அன்புணர்வும் இருந்தது. கிறிஸ்து பிறப்பு ஒரு சமப்படுத்தம், சமநிலைப்படுத்தும் ஒரு விழா. காயங்களை நேயங்களாலும், எதிர்மறை உணர்வுகளை நேர்மறை உணர்வுகளாலும் நிரப்பி சமப்படுத்தும் ஒரு விழா. அச்சத்தை மகிழ்ச்சியால் நிரப்பி பூமியை வான் வரைக்கும் தூக்கிவிடும் விழா.

#### 3. தாவீதின் ஊரிலே உங்களுக்காக

இஸ்ரயேல் நாட்டு மக்களின் கனவுகளை நிறைவு செய்த ஓர் அரசர் தாவீது. எனவேதான் மெசியா தாவீது பரம்பரையிலிருந்துதான் தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தை தாவீதின்மீது ஏற்றிவைத்தனர். கடவுளின் மகன் மெசியாவையும் சாதாரண மனிதன் தாவீதையும் இணைக்கும் அளவுக்கு தாவீது இஸ்ரயேல் மக்களின் மிகப்பெரிய அரசராகக் கருதப்பட்டார். இந்தப் பெரிய அரசரின் வாரிசு சிறிய மக்களுக்கு அறிவிக்கபடுகிறது. ‘உங்களுக்காக’... ‘பிறந்திருக்கிறார்’ (லூக் 2:11) என்று சொல்லுவதின் மூலம் அரசும், அடிமையும், வலிமையும் வலுவின்மையும், பெரியனவும் சிறியனவும் ஒன்றிணைந்த ஒரு விழா.

#### 4. துணிகளில் பொதிந்து

நற்செய்தியாளர் லூக்காவின் (2:7) இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியில் ‘பொதிந்து’ என்ற வார்த்தையை நமது மொழியாக்கத்தினர் தந்துள்ளனர். மிக மிக உன்னதமான, நெருக்கமான, மேன்மையான குழந்தை ஒன்றை ‘பொதிந்து’ வைத்தார்கள். இழக்கமுடியாத ஒரு குழந்தை. எனவேதான் தாய் மரியாவும், நம் தாய் மொழியும் சேர்ந்து குழந்தையை ‘பொதிந்து’ துணிகளில் வைத்தார்கள். மரியாவும், யோசேப்பும் முன்னுணர்வாகத் துணிகளை எடுத்துச்சென்றார்களோ, இல்லை இருந்ததை வைத்தோ, இரவல் வாங்கியோ பயன்படுத்தினார்களோ என்பது தெரியவில்லை. இருப்பினும் மிகக்குறைந்த அளவே ‘குழந்தை துணிகள்’ (Baby Clothes) இருந்ததால் பொதிந்து வைத்திருக்கவேண்டிய ஒரு நிலை. தாவீதின் பரம்பரையே குறைந்த அளவு துணிகளோடுதான் பொதியப்பட்டிருக்கிறார். நாம் விரும்புவதையெல்லாம் பெறுவது உண்மையான மகிழ்வல்ல. நம்மிடம் இருப்பதிலிருந்து பெறும் மகிழ்ச்சியே வாழவின் உண்மையான அழகுகோல்.

#### 5. நமது இருப்பு கிறிஸ்து பிறப்பு

மிகச்சாதாரண நிலையில்/ துணியில் பிறந்தாலும் இயேசுவைப் போன்று நாமும் வாழ்வைச் சுவைக்க முடியும்; இறைவனோடு சங்கமம் ஆக முடியும். செல்வந்தனைப்போன்று விலையுயர்ந்த, மெல்லிய, செந்நிற ஆடை (லூக் 16:19) உடுத்தியிருந்தாலும் வாழ்விலிருந்து வெளியே தள்ளப்பட முடியும்; இறைவனோடு சேரவே முடியாத அளவுக்கு “பெரும் பிளவையும்” (லூக் 16:26) உருவாக்க முடியும். கிறிஸ்து பிறப்பு விழா வெறும் அழகு, ஆடை, ஆடம்பரம் இவைகளையும் தாண்டி இயல்பான, இயற்கையான நிலையிலும் வாழ்வு உண்டு என்பதை உணர்த்தும் ஒரு விழா.

விலையுயர்ந்த மெல்லிய, செந்நிற ஆடை செல்வந்தர் உடலை போர்த்தியது. புண்கள், நாய்களின் நாக்குகள் (லூக் 16:29, 21) ஏழை இலாசரின் உடலைப் போர்த்தியது. வானதூதர்கள் இங்கும் தோன்றுகிறார்கள். இயேசுவின் பிறப்பில் விண்ணிலிருந்து ஒரு மனிதம் மண்ணுக்கு வருகிறது. ஏழை இலாசர் இறப்பில் மண்ணிலிருந்து ஒரு மனிதன் விண்ணுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றான். நம்மை ஒட்டியிருக்கும் அழகு, ஆடை, ஆடம்பரம் பெரும் பிளவுகளை (லூக் 16:20) உருவாக்கியதேயன்றி இறைவனிடம் கடந்துசெல்ல உதவவில்லை. நமது இருப்புத்தான் கிறிஸ்து பிறப்பேயன்றி, நம்மிடம் இருப்பவையல்ல.

#### 6. தீவனத் தொட்டியில் கிடத்தினர்

பிறந்த குழந்தையை துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் மரியாள் கிடத்தினார் (லூக் 2:7). தீவனத் தொட்டி என்பது ஆடுமாடுகளுக்கான உணவுகளைப் போடும்போது அவைகள் வந்து உண்டுசெல்ல பயன்படுத்தபடும் ஒரு மரத்தொட்டி. அதுவே குழந்தை இயேசுவுக்கு மரத்தொட்டில். பயன்படுத்தும் பொருள் ஒன்றுதான். ஆனால் மனநிலை மாறும்போது நோக்கங்களும் மாறுகின்றன. தொட்டி தொட்டிலாகியது. சாதாரண நிலைகளில் நாம் செய்யும் சிறிய மாற்றங்கள் பெரிய இலக்குகளாகின்றன. சாதாரண பொருள்களுக்கு அசாதாரணமான இலக்குகளைத் தருவது இயேசுவின் பிறப்பு விழா.

இயேசுவின் வாழ்வில் தீவனம் அல்லது உணவு ஒன்றித்துப்போன ஒன்று. தானும் மகிழ்ச்சியாக உண்டார். விருந்துகளுக்குச் சென்றார். மக்களுக்கு வயிறார உணவு வழங்கினார். அழியவேண்டிய உணவின் அழியாத ஆன்மீகமான உறவையும் பலியையும் புரிந்துகொண்டார். எனவேதான் சாதாரண உணவை எடுத்து தன் உடலாக மாற்றினார். எல்லாருக்கும் உணவு உடலாக மாறுகிறது. இயேசுவுக்கு உடல் உணவாக மாறுகிறது.

தன் உடலே பிற்காலத்தில் உணவாகும் என்பதுதான் தொழுவத்தில் பிறந்த இயேசு தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டதன் அடையாளமோ! சில நற்கருணை இறையியலார்கள் இக்கருத்தை முன்மொழிகின்றனர். அதாவது தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டபோது இயேசுவின் உடல் நற்கருணையின் முன்அடையாளமாகியது. ஒவ்வொரு முறையும் ‘இதை என் நினைவாக செய்யுங்கள்’ என்று இயேசுவின் உடலை தூக்கி நிமிர்த்தும்போது இனி தீவனத்தொட்டியும், அது சுமந்த உடலும் நம் நினைவுக்கு வரட்டும். அப்படிப் பார்க்கும்போது கிறிஸ்து பிறப்பு விழா உடலையும்/உணவையும் ஒன்றாக இணைக்கும் விழா. தீவனத் தொட்டியை நற்கருணைப் பெட்டியாக மாற்றிய விழா.

### நிறைவாக

கிறிஸ்து பிறப்பு விழாவில் சந்திக்காத நபர்கள் சந்தித்தார்கள். விண்ணும் மண்ணும் சந்தித்தன. வறுமையும், வாழ்வும் சந்தித்தன. உலகும் அதன் நிலைகளும் சமநிலைக்கு வந்தன. உணர்வுகள் சமப்படுத்தப்பட்டன. தோற்ற முரண்பாடுகள் நேர்மறைகளாயின. வரக்கூடிய இம்மாபெரும் விழாவின் தன்மைகள் நம்மை நன்மைகள் உருவாக்க அழைக்கட்டும். தெற்கு சூடான் நாடு, கடுமையான பசியால் வாடும்போதுதான் நாம் இவ்விழாவைக் கொண்டாடத் தயார் நிலையில் உள்ளோம். நாம் வாழும் இந்த உலகை மந்த நிலையிலிருந்து மதிப்பீடு நிலைக்கு உயர்த்துவோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் தெற்கு சூடான் மக்களுக்காக 25,000 யூரோக்கள் கொடுத்துள்ளார். இது மூலமாக சுமார் 5000 குடும்பங்கள் பசி போக்கும்; 30,000 மக்கள் உணவு உண்ணத் தயாராவார்கள். அந்தப் பணத்தை வைத்து விவசாயக் கருவிகள், பொருள்கள் வாங்கி தாங்களே தங்கள் உணவைத் தயாரித்துக்கொள்ளும் ஒரு தனித்துவம் பெறுவார்கள். எனவே இது தர்மம் அல்ல; தனித்துவம் தேடல். கிறிஸ்து பிறப்பின் நேர்மறை முரண்பாடுகளே (Paradox) உலக மக்களுக்கான நேர்மறை சக்திகளாகட்டும் (Positive Energy).

**அருள்பணி. ஆ. உபால்டு, திண்டிவனம்**


**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**



**தயவுசெய்து அவதானியுங்கள்**

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**

கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

# புதிய ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின்

# வாழ்வு, பணி, நியமனம் - ஒரு பார்வை

- அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்-

### புதிய ஆயர் நியமனம் தொடர்பான அறிவிப்பு

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி புதன் கிழமை வத்திக்கான் தூய பேதுருவானவர் சதுக்கத்தில் வழமையாக நடைபெறும் மதிய மூவேளைச் செபத்தின்போது (வத்திக்கான் நேரம் பகல் 12.00 மணிக்கு - இலங்கை நேரம் மாலை 4.30 மணிக்கு) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதேவேளை அன்றையதினம் இலங்கை நேரம் மாலை 4.30 மணிக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் புதிய ஆயர் நியமனம் பற்றிய திருத்தந்தையின் செய்தியை சம்பிரதாயபூர்வமாக அறிவித்தார். இந்த அறிவிப்பு நிகழ்வுக்காக மன்னார் மறைமாவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலைப் பிரதிநிதிகள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிய ஆயர் நியமனம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டதும் கத்தோலிக்க திருச்சபையின் வழக்கப்படி மகிழ்ச்சியின் அடையாளமாக பேராலயத்தின் மணிகள் ஒலித்தன. அதேபோன்று மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களின் மணிகளும் ஒலித்தன.

### ஓர் ஆயர் ஓய்வு பெறுதலும் புதிய ஆயர் நியமிக்கப்படுதலும்

கத்தோலிக்க திருச்சபையின் சட்டம் 401 பகுதி 1இற்கு அமைவாக ஒரு மறைமாவட்ட ஆயர் 75 வயதை எட்டியதும் தனது பணித்துறப்பை அல்லது ஓய்வை திருத்தந்தைக்கு கடிதம் மூலம் அறிவிக்க வேண்டும். திருத்தந்தை அதை ஏற்றுக்கொண்டு புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை ஓய்வுபெறும் ஆயரை தொடர்ந்தும் பணிப்பொறுப்பில் இருக்கும்படி கேட்கலாம் அல்லது இன்னுமொரு குருவையோ ஆயரையோ அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கலாம்.

இதன்படி மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தனது 75 வயதை எட்டியிருந்தார். அவருடைய பணித்துறப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை ஓய்வுநிலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமித்தார். புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை ஆயருக்குப் பதிலாக மறைமாவட்டத்திற்கு தலைமைதாங்கி அதன் நிர்வாக, மேய்ப்புப்பணி சார்ந்த கடமைகளை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை சிறப்பாக மேற்கொண்டுவந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக மன்னார் மறைமாவட்டம் புதிய ஆயரை எதிர்நோக்கிக் காத்திருந்தது. இந்த இரண்டரை வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் திருச்சபையின் சட்டத்திற்கு அமைவாக புதிய ஆயரை நியமிப்பதற்கான பல்வேறு அலுவல்களை, நடைமுறைகளை இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள் மேற்கொண்டிருந்தார். ஆலோசனைகள், கருத்துப் பகிர்வுகள் போன்ற நீண்ட நடைமுறைகளுக்குப் பின்னர் பல நாட்களாக எதிர்பார்த்திருந்த இந்த அறிவிப்பு இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஒரு மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் அந்த மறைமாவட்டத்தில் இருந்துதான் நியமிக்கப்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மறைமாவட்டத்திற்குள் இருந்தும் நியமிக்கப்படலாம், மறைமாவட்டத்திற்கு வெளியே அதாவது வேறு மறைமாவட்டக் குருவோ, ஆயரோ நியமிக்கப்படலாம். அந்த வகையில்தான் நீண்ட நெடிய ஆலோசனைகளுக்குப் பின்னர் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களில் ஒருவரான இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.



### புதிய மன்னார் ஆயரின் வாழ்க்கைக் குறிப்பு

மேதகு விடலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் 1948ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். 1951ஆம் ஆண்டு இவருடைய பெற்றோரும் குடும்ப உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு கிறாண்பாஸ் பகுதிக்கு குடிபெயர்ந்தனர். பின்னர் 1955ஆம் ஆண்டு கொண்டாஞ்சேனையில் குடியேறினர். இவருடைய தந்தையார் திரு. சேவியர் பஸ்ரியன் பெனாண்டோ (பொறியியலாளர்), தாயார் திருமதி. ஞானசொரூபி பெனாண்டோ. இவருடைய பெற்றோர் இந்தியாவில் உள்ள தூத்துக்குடி மறைமாவட்டக் கத்தோலிக்க பரம்பரையைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய பிள்ளைகளில் நால்வர் துறவற வாழ்வை ஏற்றுக்கொண்டவர்கள். இருவர் குருக்கள், இருவர் அருட்சகோதரிகள். இப்பிள்ளைகளில் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ அவர்கள் கடைசி மகன் ஆவார். இவருடைய மூத்த சகோதரர் அருட்திரு. ஜோ பெனாண்டோ ஆவார்.

இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியில் பயின்றார். பின்னர் கொழும்பில் உள்ள புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் சேர்ந்து தனது குருத்துவத்திற்கான ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். சிறிய குருமடக் கல்வியை நிறைவுசெய்த இவர் பின்னர் கண்டியில் உள்ள தேசியக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்கைநெறிக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் 1969ஆம் ஆண்டு இறையியல் கற்கைநெறிக்காக உரோமைக்கு அனுப்பப்பட்டார். 197ஆம் ஆண்டு அங்கு அவர் இறையியல்மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

### ஆயரின் கடந்தகாலப் பணித்தளங்கள்

அன்றைய திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்களால் 1973ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி உரோமையில் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து 1974ஆம் ஆண்டு உரோமையில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் நன்னெறி இறையியல் பயின்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவராய் நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய இவர், கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயம், கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் போன்ற இடங்களில் மறைப்பணி ஆற்றினார். தொடர்ந்து 1981 தொடக்கம் 1987ஆம் ஆண்டுவரை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் விவிலியப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். 1987ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அங்குள்ள வோசிங்கரன் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். நாடு திரும்பிய அவர் கண்டி குருத்துவக் கல்லூரியில் உதவி அதிபராகவும், பின்னர் 1989 – 1991 வரையான காலப்பகுதியில் அதிபராகவும் பணியாற்றினார்.

பின்னர் தனது மறைமாவட்டத்திற்கு திரும்பிய இவர் மொறட்டுவப் பகுதியில் பங்குத்தந்தையாகவும், மறைக்கோட்ட முதல்வராகவும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பாக ஆயரின் பதிலாளர் போன்ற நிலைகளிலும் பணியாற்றினார்.

2011ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி அன்றைய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் உதவி ஆயராக இவரை நியமித்தார். 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். கடந்த ஆறு ஆண்டுகளாக கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உதவி ஆயர் என்ற நிலையில் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பானவராக இருந்து இவர் சிறப்பாகப் பணியாற்றிவந்தார். இந்நிலையில்தான் தற்போது இவர் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### மன்னார் மறைமாவட்டம்

இலங்கையில் உள்ள 12 மறைமாவட்டங்களில் மன்னார் மறைமாவட்டம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க கிறிஸ்தவம் இன்றுவரை கடந்த 500 ஆண்டுகளாக உயிர்ப்புநிலையில் இருக்கின்றது. 700க்கும் அதிகமான கத்தோலிக்க விசுவாசிகள் தமது விசுவாசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த உன்னதமான வரலாற்றைக்கொண்ட புனித இடமாக மன்னார் கணிக்கப்படுகின்றது. உலகளாவிய மரியன்னை திருத்தலங்களில் ஒன்றாகிய மடு அன்னையின் திருத்தலம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் நிர்வாக மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்திலேயே ஒப்பீட்டளவில் கத்தோலிக்கர் அதிகமாக உள்ளனர். எனவே இது கத்தோலிக்க மாவட்டம் என்ற சிறப்பையும் கொண்டுள்ளது. கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் மற்றும் பல்வேறு கலை வடிவங்கள் கடந்த 400 வருடங்களாக இங்கு பயில்நிலையில் உயிர்த்துடிப்புடன் இருக்கின்றன. கடந்த காலங்களில் ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்குரலாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் குரல் ஒலித்துவந்ததை இந்த உலகமே நன்கறியும்.

இன்று 43 பங்குகளையும் 73 மறைமாவட்டக் குருக்களையும் கொண்டதாக மன்னார் மறைமாவட்டம் விளங்குகிறது. தற்போது இங்கு ஏனைய துறவற சபைகள் உட்பட 106 குருக்கள் பணியாற்றுகின்றனர். ஆன்மீகம், பௌதீக வளம், சமூக அரசியல் விழிப்புணர்வு போன்ற பல்வேறு நிலைகளில் மன்னார் மறைமாவட்டம் வளர்ந்துவருகின்றது என்பது உண்மை. இப்படியாக பலவித சிறப்புக்களைக்கொண்ட மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மிகுந்த முக்கியத்துவம் உடையவராகக் கொள்ளப்படுவதில் ஆச்சரியமில்லை.

### நிறைவாக

ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தலைசிறந்த மனிதநேயவாதி, நற்பண்பாளர், சிறந்த கல்விமான், நன்னெறி இறையியலாளர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். பங்குத்தந்தை, இறையியல் பேராசிரியர், குருத்துவக் கல்லூரி அதிபர், துணை ஆயர் என பல்வேறு நிலைகளில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்.

இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சிந்திக்கவும், செயலாற்றவும் வல்லவர். மிகவும் எளிமையானவர், யாரும் அவரை எளிதில் அணுகலாம்.

புதிய மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் பணிக்காலத்தில் மன்னார் மறைமாவட்டம் இன்னும் சிறப்பான வளர்ச்சியைக் காணும் என நம்பலாம்.

# ஆயர் பெருந்தகையே! அன்புடனே வருக!

விசுவாச விதை நிலமாம்
மன்னாரின் ஆயராய்
ஆசிபெற்ற திருக்கரத்தில்
நெடிது உயர்ந்த
செங்கோல் தாங்கி
இறைமகனின் இறையாட்சி
எனும் கனவை நனவாக்க
வருகின்ற
ஆயர் பெருந்தகையே
நின் பொற்பாதம்
தனைப்பதித்து
வந்திடுக! வந்திடுக!

“கடவுள் நம்மோடு”
எனும் பொருள் பொதிந்த
“இம்மானுவேல்”
நாமம் தாங்கி
வேதசாட்சி விளை நிலமாம்
மன்னார் மறை நிலத்தை
ஆட்சி செய்ய வந்திருக்கும்
மூன்றாவது ஆண்டகையே
கரம்கூப்பி சிரம் தாழ்த்தி
மகிழ்வோடு வரவேற்றோம்
வந்திடுக! வந்திடுக!

கற்பாறை மேட்டினிலே
கட்டப்பட்ட கட்டிடம்போல்
உறுதியான விசுவாசம்
கொண்டது எங்கள் நிலம்
நீரோடை மண்ணருகில்
நடப்பட்ட விருட்சம்போல்
நற்கனிகள் நாம் கொடுக்க
எம்மை நீர் வழிநடத்த
வந்திடுக! வந்திடுக!

சிறப்பாக ஆட்சி செய்து
கரம்கொண்டு
எமை அணைத்து
எதிர்கொள்ளும்
குறைகளெல்லாம்
நிறைவுகளாய் நாம் காண
துறவறமும் இல்லறமும்
கைகோர்த்துப்
பணிகள் செய்து
சீடத்துவ வாழ்வினிலே
எம் மக்கள் உயர்ந்து நிற்க
வழிகாட்டும் ஆண்டகையே
வந்திடுக! வந்திடுக!

ஆவியின் ஞானத்தை
கையகப்படுத்தி நீரும்
இறைமகன் இயேசுபிரான்
பண்புகளைத் தாங்கி நின்று
அனைத்துத் தடைகளையும்
தாண்டிப் பணிபுரிந்து
புத்துயிர் பெற்று நாமும்
புதுவாழ்வைக் கண்டடைய
தலைமை தாங்கும் ஆயனே
வந்திடுக! வந்திடுக!

**இ. அ. அமலரட்னம்,**
**யாழ்ப்பாணம்**




## மன்னா பத்திரிகையின் சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**- மன்னா நிர்வாகம்**

# மியன்மார் மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கான திருத்தந்தையின் திருப்பயணம்



மியான்மார் நாட்டின் ஜனநாயகவாதியான ஓங் சாங் சூக்கி அவர்களைச் சந்தித்தபோது



பங்களாதேஷ் நாட்டின் ஜனாதிபதி அப்துல் கமீட் அவர்களைச் சந்தித்தபோது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மியன்மார் மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கான திருப்பயணத்தை நிறைவுசெய்துகொண்டு உரோம் திரும்பியுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27 - 30ஆம் திகதிவரை மியான்மாரிலும், கடந்த நவம்பர் 30 - டிசம்பர் 2ஆம்திகதி வரை மியன்மாரின் அயல்நாடான பங்களாதேஷிலும் திருத்தந்தை திருப்பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

மியன்மாரின் 59 மில்லியன் சனத்தொகையில் 90 வீதமானவர்கள் புத்த சமயத்தினர். கத்தோலிக்கர் 1.2 வீதத்தினர் மட்டுமே. அயல்நாடான பாங்களாதேஷில் 90 வீதமானவர்கள் முஸ்லிம்கள். கத்தோலிக்கர் 1 வீதத்திற்கும் குறைவானவர்களே.

இந்த இரு நாடுகளுக்குமான அப்போஸ்தலிக்க பயணத்தின் நோக்கம் இந்த நாடுகளில் உள்ள மிகவும் சிறிய கத்தோலிக்க சமூகங்களின் விசுவாசத்தை உறுதிப்படுப்படுத்துவது மட்டுமல்ல, மாறாக பொது நன்மைக்காக கிறிஸ்துவின் நல்லிணக்கம், மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை போன்ற செய்திகளை இந்த ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதுமாகும்.

மியன்மார் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்தபோது ஒவ்வொரு இனக்குழுவையும், அவர்களது தனித்துவத்தையும் மதிக்கும்படி திருத்தந்தை அழைப்புவிடுத்தார். மியன்மார் அரசினால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு பங்களாதேஷ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்ற பல்லாயிரக்கணக்கான றோஹிங்யா மக்கள் குறித்து திருத்தந்தை நேரடியாகப் பேசுவதைத் தவிர்த்திருந்தார். அவர் பங்களாதேஷ் நாட்டிற்குச் சென்றிந்தவேளை அங்கு றோஹிங்யா அகதிகளைச் சந்தித்து உரையாடி அவர்களின் சோகக் கதைகளுக்கு செவிமடுத்தார்.

## வறியோருக்கான மருத்துவ முகாமை திருத்தந்தை பார்வையிட்டார்!

'நாம் ஏழைகளைச் சந்திக்கவும், பகிர்ந்துகொள்வது எப்படி என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும். இதன் வழியாக நம் வாழ்வுமுறை மாற்றம் பெறும்'' என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டரில் வெளியாயின.

மேலும், உரோம் நகர் ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை வழங்குவதற்காக வத்திக்கான் தூய பேதுரு வளாகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமை, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையிட்டார்.

கடந்த கார்த்திகை 19, ஞாயிறன்று கடைப்பிடிக்கப்பட்ட முதல் உலக வறியோர் நாளையொட்டி அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவ முகாமில் பணியாற்றும் தன்னார்வப் பணியாளர்கள் மற்றும் சிகிச்சைக்காகக் காத்திருந்த ஏழைகளையும் திருத்தந்தை சந்தித்து சிறிதுநேரம் உரையாடினார்.

இந்த இலவச மருத்துவ முகாம் இத்தாலிய செஞ்சிலுவை சங்கத்தால் கடந்த வாரம் முழுவதும் இயங்கியது. இதயம், தோல் உள்ளிட்ட, சில நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்கள் இந்த முகாமில் பணியாற்றினர். இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நிறைவில் திருத்தந்தை அறிவித்த உலக வறியோர் நாள் நிகழ்வுகளை திருப்பீட புதியவழி நற்செய்தி அறிவிப்பு அவை நடத்தி வருகின்றது.

## திருப்பலியானது நலிந்தோருக்கு வழங்கப்படும் மருந்து



கொடுமையான பசி ஆதிக்கம் செலுத்தும் உலகில் நாம் வாழ்கிறோம் என்றும் ரொட்டி மனித ஒருமைப்பாட்டிற்கு ஓர் அடையாளமாக இல்லை என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் கூறினார்.

TV 2000 என்ற இத்தலிய தொலைக்காட்சி நிறுவனம், "எங்கள் தந்தாய்'' என்ற தலைப்பில், உருவாக்கியுள்ள ஒரு தொடரின் ஐந்தாவது பகுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலியைக் குறித்தும், உலகில் நிலவும் பசி, பட்டினி ஆகிய கொடுமைகள் குறித்தும் தன் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இறைவனின் பிரசன்னம் நாம் திருப்பலியில் பகிர்ந்தளிக்கும் அப்பத்தில் உள்ளது என்று கூறிய திருத்தந்தை, திருப்பலி வலியோருக்கு வழங்கப்படும் விருந்து என்பதைவிட, நலிந்தோருக்கு வழங்கப்படும் மருந்து என்று கூறுவதே பொருந்தும் என்று எடுத்துரைத்தார்.

இன்றைய உலகில் பரவியுள்ள "துரித உணவு'' என்ற கருத்தியலுக்கு மாற்றுக் கருத்தியலை உருவாக்கி, அதன் வழியே பாரம்பரிய உணவு வகைகளை மக்கள் உண்டு, நலமாக வாழும் வழிமுறைகளை சொல்லித்தரும் "மெதுவான உணவு'' என்ற அமைப்பை நிறுவிய கார்லோ பெத்ரீனி என்ற இத்தாலியரின் நேர்காணலும் இந்தத் தொலைக்காட்சி நிகழ்வில் இடம்பெற்றது.

### நவம்பர் – 19 வறியோரின் உலக நாள்

## வறியோருடன் மதிய உணவருந்திய திருத்தந்தை பிரான்சிஸ்



நவம்பர் 19 ஞாயிறன்று வறியோறின் முதல் உலக நாளைச் சிறப்பிக்கும் வகையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பசிலிக்காவில் தலைமையேற்று நிகழ்த்திய திருப்பலிக்கு ஐரோப்பாவின் பல்வேறு நகரங்களிலிருந்து வறியோர் வருகை தந்திருந்தனர்.

4000இற்கும் அதிகமாக வத்திக்கானுக்கு வருகைதந்த வறியோர் அனைவருக்கும் திருப்பலிக்குப்பின் மதியவிருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 1500 பேருடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருளாளர் ஆறாம் போல் அரங்கத்தில் மதிய உணவருந்தினார். உரோம், பாரிஸ், வார்சா, பிரஸ்ஸல்ஸ், லக்ஸம்பர்க் ஆகிய நகரங்களிலிருந்து வருகைதந்த வறியோருக்கு உரோம் நகரின் பல்வேறு குருத்துவ பயிற்சி மையங்கள், கல்லூரிகள் மற்றும் உணவகங்களில் மதிய உணவு வழங்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

மேலும் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்திற்கருகே நவம்பர் 13 முதல் 19 ஞாயிறு முடிய இயங்கிய மருத்துவ முகாமில், வறியோருக்கு இலவச மருத்துவ சோதனைகளும், உதவிகளும் வழங்கப்பட்டன. உரோமையப் பேரரசர்முன் வறியோரை அழைத்துச்சென்று, "இவர்களே, திருஅவையின் உண்மையான கருவூலம்'' என்று கூறிய தியாக்கோனாகிய புனித லோரன்ஸ் நினைவாக எழுப்பப்பட்டுள்ளன பசிலிக்காவில் நவம்பர் 18 அன்று வறியோர் உலக நாளின் திருவிழிப்பு வழிபாடு நடைபெற்றது.

## புனிதர்களின் பாதையில்

### புனித தோர்லாக்

*துறவி - (கி.பி. 1599 - 1621)*

*(திருநாள்: டிசம்பர்: 23)*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஐஸ்லாந்தின் தென் பகுதியில் உள்ள ஃபியாட்ஷில்த் என்னும் இடத்தில் 1133ஆம் ஆண்டு பிறந்தவர் தோர்லாக் (Thorlak). 15 வயதுகூட நிறைவடையாத நிலையில் திருத்தொண்டராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட தோர்லாக் தமது 18ஆவது வயதில் குருத்துவ அருள்பொழிவு பெற்றார்.

அதைத் தொடர்ந்து மேற்படிப்பிற்கு அனுப்பப்பட்டார். 1153 முதல் 1159 வரையிலான ஆண்டுகளில் பாரிஸ் மற்றும் லிங்கோன் நகரங்களில் உயர்கல்வி கற்றார். ஞானம் நிறைந்த குருவாக ஐஸ்லாந்து திரும்பினார்.

அந்த நாட்களில் ஐஸ்லாந்தில் இருந்த குருக்கள் பலர் திருமணம் முடித்து குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். கற்பு வார்த்தைப்பாட்டை மீறிய அவர்கள் அது தவறு என்ற எந்த உணர்வும் இன்றி இருந்தார்கள். ஒழுக்கக்கேடான வாழ்வில் திளைத்திருந்தார்கள். அவ்வாறான சூழலில் கைம்பெண்ணான செல்வச்சீமாட்டி ஒருவர் தம்மைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தோர்லாக்கை விரும்பிக் கோட்டார். தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்த தோர்லாக் கைப்பெண்ணின் கோரிக்கையை மறுத்து தமது கற்பை இறைவனுக்குக் காணிக்கையாக்கி வாழ்ந்தார்.

தோர்லாக்கிற்கு தெரிந்த விவசாயி ஒருவர் இருந்தார். அவருக்கு வாரிசு இல்லை. எனவே அவர் தமது விவசாய நிலத்தில் துறவு மடம் அமைக்குமாறு அந்த நிலத்தை தோர்லாக் பெயரில் எழுதி வைத்துவிட்டு ஒருநாள் திடீரென இறந்தார். இதை அறியவந்த தோர்லாக் இது இறைவனின் திருவுளம் என்பதை ஏற்றார். அந்த இடத்தில் துறவு மடம் ஒன்று எழுப்பினார். அதன் தலைமைத் துறவியாகவும் செயல்பட்டார்.

தோர்லாக்கை ஸ்கால்ஹோல்ட் மறைமாவட்டத்தின் ஆயராக 1178ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்தார்கள். நிடாரோஸ் மறைமாவட்ட ஆயர் அகஸ்டின் என்பரால் தோர்லாக் திருப்பொழிவு செய்யப்பட்டார். ஆயரான உடன் முதல் வேலையாக மறைமாவட்டத்தின் குருக்களது ஒழுக்கச் சீர்கேடுகளைக் களைய முயற்சி எடுத்தார். கற்பு நெறி தவறி திருமண வாழ்வு வாழ்கிறவர்களைக் கண்டித்தார். அத்துடன் திருச்சபையின் பொறுப்புகளைப் பணம் கொடுத்துப் பெற்று அனுபவிக்கும் அநியாயத்திற்கும் சாவு மணி அடித்தார். பொதுமக்கள் திருச்சபையின் செயல்பாட்டில் தலையிட்டு குழப்பம் விளைவிக்கும் சீரற்ற தனத்தை நிறுத்தத் தொடங்கினார்.

இத்தகைய சீர்திருத்த முயற்சிகளால் ஆயரை பலர் விமர்சித்தார்கள், எதிர்த்தார்கள். அவர்களுக்கு மத்தியிலும் ஒரு சிலர் தோர்லாக்கின் புரட்சிகரமான செயலினை ஆதரித்தார்கள், ஊக்கம் அளித்தார்கள். இதே போன்றதொரு சீர்திருத்தத்தைச் செய்துவந்த நார்வே நாட்டுப் பேராயர், புனித எய்ஸ்டென் தமது முழு ஆதரவையும் தோர்லாக்கிற்கு வழங்கினார். இவர்தான் ஐஸ்லாந்திற்குப் பெறுப்பாளராக விளங்கினார்.

இறைவனின் ஊழியனாக தோர்லாக் முன்னெடுத்த பல்வேறு முயற்சிகளால் குருக்களின் வாழ்வில் மாற்றம் தெரிய ஆரம்பித்தது. திருச்சபை மலர்ச்சியுடன் நடைபோடத் தொடங்கியது. 15 ஆண்டுகள் ஆயராக இருந்த பிறகு, தமது பொறுப்பைத் துறந்து, தான் தொடங்கிய துறவு மடத்திற்குச் சென்றுவிடலாம் என்று முடிவு செய்தார். அதைச் செயல்படுத்தும் முன்பாக திடீரென 1193, டிசம்பர் 23 அன்று இறைவன் தோர்லாக்கை அழைத்துக் கொண்டார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1198இல் ஐஸ்லாந்து ஆயர் கூட்டமைப்பானது தோர்லாக்கை புனிதர் என்று ஏற்றுக்கொண்டது. திருச்சபையால் புனிதர் என்று முறைப்படி அறிவிக்கப்படாமலேயே மக்களால் தோர்லாக் வணங்கப்பட்டார். இந்நிலையில் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1984, ஜனவரி 14 அன்று தோர்லாக்கை புனிதராகவும், ஐஸ்லாந்தின் பாதுகாவலராகவும் அறிவித்தார். ஐஸ்லாந்தில் வணங்கப்படும் மூன்று ஐஸ்லாந்து புனிதர்களுள் இவரும் ஒருவர் மற்றர்கள் புனித ஜோன் ஒக்முந்சன் மற்றும் அருளாளர் நல்லவரான குத்முந்.

# கலை இலக்கியச் சாளரம்

## கிறிஸ்மஸ் சிறப்புக் கவிதைகள்

### எம் தெய்வமே பிறப்பெடு!



அவரவர் நிலத்தில் அவரவர் வாழ
தன்தன் வீட்டில் தலைசாய்த்து உறங்க
எத்தனை போராட்டம்! எத்தனை போராட்டம்!
மீட்பனே பிறப்பெடு மீளக் குடியமர்த்த.

“தேடுங்கள் கண்டடைவீர்கள்”
நம்பித் தேடுகின்றோம்
கண்மூடு முன்னர் காணவேண்டும் உறவுகளை
கடவுளே பிறப்பெடு கண்டுகொள்ளச் செய்வதற்கு.

சிறைகளுக்குள்ளே சிக்கித் தவிக்கின்றார்
பொது நன்மைக்காக புறப்பட்டுப் போனவர்கள்
எத்தனை ஆண்டுகள்? எத்துணை வெந்துயர்?
விடுதலை வேந்தனே விடுவிக்கப் பிறப்பெடு.

தலைவர்கள் என்றால் வழிகாட்ட வேண்டாமா?
தலைமைத்துவத்தைத் தரணிக்கு காட்டினோமே
தனயர்களா தந்தையர்க்கு எடுத்துரைப்பது?
தெய்வமே பிறப்பெடு தலைவர்களை நெறிப்படுத்த.

சமயமும்கூட சமயா சமயங்களில் சந்தர்ப்ப வாதமாய்
கோயில்களின் நெருக்கமும் குடியிருப்புகளின் தகுதி பார்த்து
கைம்பெண்ணின் காணிக்கை வியக்கப்பட்டது வரலாறு
கோமகனே பிறப்பெடு குடிசைகளில் குடியிருக்க.

அமைதி தந்திட ஆறுதல் ஈந்திட
அனைவரும் சமமாய் அகிலத்தில் வாழ்ந்திட
இளமைக்கு மகிழ்ச்சியாய் இறைவனே இருந்திட
தேவனே பிறப்பெடு எம் தெய்வமே பிறப்பெடு!

*- ஜெயா பாலாஜி, முருங்கன்.*

### பிறக்கின்றார் இயேசு தினம் தினம்!

“வர்த்தை மனுவானார், நம்மிடையே குடிகொண்டார்”
விண்ணிலே இருந்த வார்த்தை மண்ணுக்கு வந்தது.
எதற்காக வந்தது மண்ணுக்கு?



போர் ஒன்று வந்தது நம் நாட்டில்
போனது விடுதலை நம் வீட்டில்
அடிமைத்தனத்தில் உழல்வோர்க்கு
விடிவை வழங்க இயேசு வந்தார்.

முடங்கிப் போனது எம் மக்களின் வாழ்வு
முகாரியாகியது எம் மக்களின் வாழ்வு
முடமாக்கியது மக்களை அரசு
முடவரை நடக்கச் செய்தார் இயேசு!

இராசயணக் குண்டுகள் வீசியே எறிந்து
மக்களின் பார்வையைப் பறித்தனர் பாவிகள்
பாரினிலே பார்வையைத் தந்திடவே
பாலகனாகவே இயேசுவும் வந்தார்.



சின்னத்தனமான போரையே நடத்தி
சிறுவரைச் சிதைத்தது இவ்வரசு
சிறுவரை என்னிடம் வரவிடுங்கள்
என்றே அழைத்தார் இயேசுவுமே!


போரிலே மக்களின் வாழ்வையே அழித்தனர்
அனாதைகள், விதவைகள். அகதிகள் ஆகினர்
அனைவருக்கும் வாழ்வை அளித்திடவே
அன்பராம் இயேசு அவனியில் பிறந்தார்.

வாழ்விழந்து நிற்கும் மக்களைக் கண்டு
மனமிரங்கியே இயேசுவும் இன்று
வாழ்வுதரும் வார்த்தைகளை வாரி வழங்குகிறார்!

“கலங்காதே கண்மணியே, கலங்காதே இளம் பிறையே,
பூரண சந்திரன் உனக்குள்ளே.
என்னுருவில் பல மனிதர்கள் இங்குண்டு
ஏழைப் பெண்ணின் இரு செப்புக் காசுகள்போல
உதவும் கரங்கள் இங்கு இருக்கும்வரை
நானும் பிறக்கின்றேன் தினம் தினமே”

*- ஜெனிவி காணிக்கைநாதன், (மன்னார்), கனடா*

## கொஞ்சம் சிரிங்க



**கணவன்:** நேத்து ராத்திரி.. நான் குடிச்சிட்டு வந்தப்போ.. நீ பேசிய வார்த்தை ஒவ்வொன்னும் என்னை செருப்பால அடிச்சது போல இருந்துச்சு..!!
**மனைவி:** அடப்போங்க.. குடிச்சிருந்ததால உங்களுக்கு தெரியல நெஜமாவே நான் செருப்பாலதான் அடிச்சேன்.

..................................

**மனைவி:** கணவன் மனைவி சண்டையின்னா நாலு சுவத்துக்குள்ளேதான் இருக்கணும்.
**கணவன்:** அப்ப தப்பிச்சு ஓடக்கூட எனக்கு உரிமை இல்லையா?

..................................

**ராமு:** மனைவியை அடக்கி ஆள்வது எப்படி... ன்னு ஒரு புக் எழுதவேணும்னு இருந்தேன்.....!
**சோமு:** அப்புறம் என்னாச்சு?
**ராமு:** அவ அடிச்ச அடியில மனைவியிடம் அடங்கிப்போவது எப்படி என்று எழுதிவிட்டேன்.

..................................

**மனைவி:** மதியம் ஒரு மணிக்கு மிஸ் கோல் கொடுக்கச் சொல்றீங்களே எதுக்கு?
**கணவன்:** எங்க ஆபிஸ்சுல சாப்பாட்டுக்கு யாரும் என்னை எழுப்பமாட்டாங்க...

......................................

**தாய்:** வயிற்று வலி என்றால் வயிற்றில் ஒன்றும் இல்லை என்று அர்த்தம்
**மகன்:** அப்படியானால் ஏன் வாத்தியார் அடிக்கடி தலைவலி என்கிறார். அவருக்கு தலையில் ஒன்றும் இல்லையா என்று அர்த்தமா அம்மா?

..................................

**நோயாளி:** டாக்டர், நீங்க சொன்னமாதிரி தினமும் அல்வா சாப்பிடுகிறேன். தொப்பை குறையவே மாட்டேங்குது?
**டாக்டர்:** நாசமாப் போச்சு, தினமும் அளவா சாப்பிடுங்கன்னு சொன்னது உங்க காதுல தப்பா விழுந்துடுச்சே!

.....................................

**கணவன்:** இன்னுமா சமையல் ஆகலே? நான் ஓட்டலுக்குப் போறேன்.
**மனைவி:** ஒரு அஞ்சு நிமிஷம் பொறுங்க.
**கணவன்:** அதுக்குள்ளே ஆகிடுமா?
**மனைவி:** இல்லே நானும் புடவையை மாத்திட்டு உங்களோடே வந்திடறேன்.
**கணவன்:** ????

.......................................

**கணவன்** : சாமிகிட்ட என்னமா வேண்டிக்கிட்ட?
**மனைவி** : அடுத்த ஜென்மத்திலும் நீங்கதான் என் புருசனா வரணும்னு வேண்டிகிட்டேங்க.
**கணவன்** : எனக்கு அடுத்த ஜென்மமே வேணாம்னு வேண்டிகிட்டேன்.

## மன்னா விளம்பரப் பலகை

“மகிழ்ச்சியை சேமித்து வைப்பதில் எந்தப் பயனும் இல்லை,
அவ்வப்போது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.”

உன்னால் முடியும் என்று எண்ணுவதையோ அல்லது முடியும் என்று கனவு காண்பதையோ துணிந்து தொடங்கு. உனது துணிவிலேயே அறிவும், ஆற்றலும், மந்திரமும் அடங்கியுள்ளன.

...........................

பாராட்டும் புகழும் குவியும்போது குட்டையான வாசலுக்குள் குனிந்து செல்வது போன்ற அடக்கம் வேண்டும். இல்லையென்றால் நெற்றியடி கிடைக்கும்!

...........................

எல்லா நம்பிக்கைகளும் எங்கோ ஓர் இடத்தில் சுக்குநூறாக்கும், உண்மை மட்டுமே நிலைத்திருக்கும்.

புன்னகை என்ற முகவரி உங்களிடம் இருந்தால்... நண்பர்கள் என்ற கடிதம் உங்களுக்கு வந்துகொண்டே இருக்கும்.

துன்பம் வரும்போது கண்ணை மூடாதே, அது உன்னைக் கொன்றுவிடும். கண்ணை திறந்துபார் அதை வென்றுவிடலாம்.

...........................

உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால்.. கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை....

...........................

கண்டனத்தைத் தாங்கிக்கொள்ளும் திடமனம் இல்லை என்றால் கடமையை நிறைவேற்ற முடியாது.

குறிக்கோளை மட்டும் கருதாமல், அதை அடையும் வழியையும் சிந்திக்க வேண்டும். இதில்தான் வெற்றியின் இரகசியமே அடங்கிக் கிடக்கின்றது.

## மருத்துவக் குணங்கள்



- தினமும் சாப்பாட்டிற்குப் பின் ஒரு தக்காளிப்பழம் சாப்பிடுவதால் ஜீரண சக்தி உண்டாகும். உண்ட உணவு எளிதில் செமிக்கும் மேலும் வயிற்றில் உண்டாகும் வாயுத் தொல்லையும் கட்டுப்படும்.
- வெண்டைக்காய் சாப்பிடுவதால் உடற்சூடு கட்டுப்படுத்தப்படுகிறது. வறண்ட இருமலுக்கு மிகவும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. வெண்டைக்காயில் அதிகளவு இரும்புச்சத்து உள்ளதால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.
- புதினா இலையினை அரைத்துச் சாறெடுத்து இரவில் படுக்கப்போகுமுன் முகத்தில் தேய்த்து, காலையில் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும். வேறு எந்தக் கிறீமோ, லோஷனோ முகத்திற்குத் தேவையில்லை. பருக்களும் முகத்தில் ஏற்படாது.
- பச்சை வெங்காயத்தை அரிந்து தயிரில் போட்டு இரவு படுக்கப்போகுமுன் சாப்பிட்டால் நிம்மதியான உறக்கம் வரும்.
- அன்னாசிப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டால், உடலில் ஏற்படும் வலிகளும் மற்றும் கை, கால்களில் ஏற்படும் மூட்டுவலியும் நீங்கிவிடும்.
- இரண்டு வெற்றிலையுடன், இரண்டு கராம்பு, ஒரு துண்டு சுக்கு வைத்து பால் மெளித்து நைஸாக அரைத்து நெற்றியில் பத்துப் போட்டால் கடுமையான தலைவலி நீங்கும்.
- அறுகம்புல் சாற்றை அடிக்கடி பருகி வந்தால் நரம்புத்தளர்ச்சி நீங்கும். வயிற்றுப்புண், குடல்புண் குணமாகும்.
- சிறுகுழந்தைகளுக்கு வாரம் ஒருமுறை வேப்பங்கொழுந்தை உப்பு சேர்த்து அரைத்து உண்ணக் கொடுத்தால் வயிற்றில் பூச்சித் தொல்லை இராது.
- இரவில் தூங்காமல் தொந்தரவு செய்யும் குழந்தைகளுக்குப் படுக்கப் போகுமுன் அரை ஸ்பூன் அல்லது ஒரு ஸ்பூன் தேன் கொடுத்தால் நன்றாகத் தூங்குவார்கள்.
- தினமும் 50 கிராம் அளவு அல்லது ஒரு துண்டு பப்பாளிப் பழம் சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும். மலம் நன்றாக வெளியேறி வயிறு சுத்தமாகும்.
- பழவகைகளுள் பேரிக்காயை யாரும் அவ்வளவாக விரும்பிச் சாப்பிட மாட்டார்கள். ஆனால், பேரிக்காய் இதயத்துக்கு மிகவும் நல்லது. ஜீரண சக்தியை உண்டாக்கும். நிறைமாதக் கர்ப்பிணிகள் பேரிக்காயைச் சாப்பிட்டால் தாய்ப்பால் பெருகும்.
- முள்ளங்கியை அடிக்கடி சமையல் செய்தோ பச்சையாகவோ சாப்பிட்டு வந்தால் வாதநோய் நீங்கும். இருமல், கபம், குடல் சம்பந்தமான நோய்களுக்கு முள்ளங்கி ஒரு சிறந்த மருந்தாகும்.
- இரவு படுக்கும் முன் சிறிதளவு விளக்கெண்ணெயைக் கண் இடைகளில் தடவி வந்தால், கண்கள் கவர்ச்சிகரமாய் மாறிப் பளீரென்று ஒளியுடன் திகழும், சுருக்கம் விழாமலிருக்கும்.
- சிறிதளவு வெந்தயத்தை ஊறவைத்து, அரைத்து, தலையில் தேய்த்து நன்றாக ஊறியபின் குளித்தால், முடி உதிர்வது நின்றுவிடும்.
- பாசிப்பயறு மாவுடன் சந்தனத்தைக் கலந்து தினமும் இரவில் முகத்தில் பூசிக்கொண்டு படுத்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.
- எலுமிச்சம்பழத்தின் தோலைக் காயவைத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு அவ்வப்போது சிறிதளவு ரசத்தில் சேர்த்தால் ரசம் மணக்கும். மேலும் இப்பொடியுடன், உப்பு, புதினாப்பொடி சேர்த்துப் பற்பொடியாகவும் பயன்படுத்தலாம். ஈறுகளுக்கு மிகவும் நல்லது.

## சமையல் குறிப்பு

### *கறிவேப்பிலை தோசை*

**தேவையானவை:**



புழுங்கல் அரிசி - ஒரு கப்
பச்சரிசி - ஒரு கப்
கறிவேப்பிலை - 20 கெட்டு
மிளகாய் வற்றல் - 8
சீரகம் ஒரு மேசைக்கரண்டி
கல் உப்பு - ஒரு தேக்கரண்டி



**செய்முறை :**

புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி இரண்டையும் 2 மணிநேரம் ஊற வைக்கவும். கிரைண்டரில் ஊறவைத்த அரிசி, மிளகாய் வற்றல், சீரகம், உப்பு, கறிவேப்பிலை போட்டு தோசை மா பதத்தில் அரைக்கவும். அரைத்த மாவை ஒரு பாத்திரத்தில் எடுத்து அரை கப் அளவு தண்ணீர் ஊற்றி கரைத்துக் கொள்ளவும். தோசைக்கல்லை அடுப்பில் வைத்து எண்ணெய் தடவி ஒரு கரண்டி மாவை எடுத்து தோசைக்கல்லில் ஊற்றிப் பரப்பி விடவும். மேலே எண்ணெய் ஊற்றி 2 நிமிடம் கழித்து திருப்பிப்போட்டு வெந்ததும் எடுத்துவிடவும். கறிவேப்பிலை தோசை ரெடி!

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 24 -

> **இந்தத் தொடர் நிறைவுபெற்றது!**
> கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ச்சியாக வெளிவந்த திருவழிபாடு பற்றிய இந்தத் தொடர் இத்துடன் நிறைவுபெறுகின்றது.

### 8. திருவழிபாடும் பண்பாடும்

*“நற்செய்தியின் வழியாக பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்..” (எபே. 3:6)*

**485. பண்பாட்டு மயமாக்கல் (Inculturation) என்றால் என்ன?**

இரு உறவுப் பரிமாணங்களின், அதாவது நற்செய்தி, ஒரு நாட்டின் பண்பாடு இவை இரண்டின் உறவுகளின் சங்கமம்தான் பண்பாட்டுமயமாக்கல். இவை இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்து புதிதாக மக்களைச் சந்திக்கின்றன. அவர்களின் தேவைகளுக்கு, பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கின்றன. மக்களில் புதியதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**486. திருவழிபாட்டுப் பண்பாட்டு மயமாக்கல் என்றால் என்ன?**

திருவழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்ற இறைவார்த்தைகள், சடங்குகள், அடையாளங்கள் போன்ற திருவழிபாட்டு அம்சங்கள் ஒரு நிலத்தின் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்று, அவற்றின் வழியாக திருவழிபாட்டு அம்சங்கள் இறைமக்களின் மனநிலைக்கு ஏற்றவாறு போய்ச்சேருகின்றன. இவ்வாறு நற்செய்தியை மக்களின் கலாசாரத்திற்குக் கொண்டுசெல்வதும் மக்களின் கலாசாரக் கூறுகளைத் திருவழிபாட்டிற்குக் கொண்டுவருவதும்தான் திருவழிபாட்டுப் பண்பாட்டு மயமாக்கல்.

**487. தழுவியமைத்தல் (Adaptation) பற்றிய திருச்சபையின் படிப்பினை என்ன?**

திருக்கொண்டாட்டம் பல்வேறு மக்களின் பண்பாட்டிற்கும், மரபுகளுக்கும் பொருந்தும் வகையில் இறைமக்களின் பங்கேற்புக்கும் அவர்களின் ஆன்மீக நலனுக்கும் உரிய தழுவியமைத்தல்கள் தேவைப்பட்டால் திருத்தூரக ஆட்சிப்பீடத்திற்கு அவற்றை முன்மொழிந்து, அதன் ஒப்புதலோடு நடைமுறைப்படுத்தலாம் (GIRM 395).

**488. உரோமைத் திருவழிபாட்டுப் பேராயம் இந்தியத் திருச்சபைக்கு திருவழிபாட்டிற்கென ஒப்புதல் தந்திருக்கின்ற (1969) ‘தழுவியமைத்தலின் 12 அம்சங்கள்’ யாவை?**

1. தலத்திருச்சபையில் நிலவும் வழக்கத்திற்கேற்ப, திருப்பலியின்போது அருள்பணியாளரும், இறைமக்களும் தரையில் அமரவோ நிற்கவோ செய்யலாம். காலணிகளையும் அகற்றிவிடலாம்.
2. முழந்தாளிட்டு வணக்கம் செய்வதற்குப் பதிலாக, பணிவாகத் தலைக்குமேல் கைகளைக் குவித்துக் குனிந்து வணங்கலாம் (அஞ்சலி ஹஸ்தா).
3. வார்த்தை வழிபாட்டிற்கு முன்பும், பாவ மன்னிப்புச் சடங்கின்போதும், நற்கருணைச் சந்திப்பின் இறுதியிலும் அருள்பணியாளரும் இறைமக்களும் நெடுஞ்சாண்கிடையாக (பஞ்சாங்க பிராணமம்) விழுந்து வணக்கம் செலுத்தலாம்.
4. பொருள்களை முத்தி செய்வதற்குப் பதிலாக, அவ்விடத்தின் வழக்கத்திற்கேற்ப, விரல்களாலோ உள்ளங்கையாலோ அதனைத் தொட்டுக் கண்களிலோ நெற்றியிலோ ஒற்றிக்கொள்ளலாம்.
5. சமாதான முத்தம் கொடுப்பதற்குப் பதிலாக, அருகில் நிற்பவருக்கு தலைகுனிந்து வணக்கம் செலுத்தலாம் அல்லது ஒருவரின் விரித்த கைகளிடையே மற்றவரின் குவித்த கைகளை வைத்துச் சமாதானம் வழங்கலாம்.
6. தூபப் புகையைத் திருவழிபாட்டில் அதிகம் பயன்படுத்தலாம்: தூபக் கலத்திற்குப் பதிலாக ஒரு சிறிய கைப்பிடியுள்ள தூபக் கலத்தைப் பயன்படுத்தலாம்.
7. உரோமை வழிபாட்டு வழக்கப்படி அணிகின்ற உடைகளுக்குப் பதிலாகத் திருப்பலி உடைகளை அணிகின்ற உடைகளுக்குப் பதிலாகத் திருப்பலி உடைகளை எளிமையாக மாற்றலாம். நீண்ட ஓர் அங்கியும், கழுத்திலிருந்து இருபுறமும் தொங்கும் அங்கவஸ்திரமும் அணிந்துகொள்ளலாம். இவ்வாறு மாற்றப்பட்ட உடைகளின் மாதிரி ஒன்றை திருவழிபாட்டுப் பேராயத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.
8. பீடத்தில் திருமேனித் துகிலுக்குப் (Corporal) பதிலாகப் பொருத்தமான பொருளால் செய்யப்பட்ட தாம்பூலத் தட்டைப் பயன்படுத்தலாம்.
9. மெழுகுதிரிகளுக்குப் பதிலாக எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தலாம்.
10. தொடக்கச் சடங்கிலே கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அ) காணிக்கையாகச் சில பொருள்களைத் தரலாம்.

ஆ) திருப்பலி நிறைவேற்றும் அருள்பணியாளருக்கு இந்திய முறையில் அஞ்சலி செலுத்தியோ அல்லது அவரது கைகளைக் கழுவியோ வரவேற்கலாம்: விளக்கேற்றலாம்.

11. நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுச் செபங்களைக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அவ்வப்போதே இயற்றிக் கொள்ளலாம். இருப்பினும், திருச்சபையின், உலகின் பொது நோக்கினை மறந்துவிடலாகாது.
12. காணிக்கைச் சடங்கின்போதும், நற்கருணை மன்றாட்டின் இறுதிப் புகழுரையின்போதும் இந்திய வழிபாட்டு மரபை இணைத்துக் கொள்ளலாம். மலர் தூவி, தூபப்புகை காட்டி, ஒளி சுற்றி மூன்று முறை அஞ்சலி செலுத்தலாம்.



**489. திருவழிபாட்டில் தழுவியமைத்தலைப்பற்றிய தமிழக ஆயர் பேரவையின் படிப்பினை (1973) என்ன?**

1. அருள்பணியாளர் காலணியின்றி திருப்பலி நிறைவேற்றலாம்.
2. முழந்தாள்படியிடுவதற்குப் பதிலாகத் தலையில் கைகளைக் குவித்து உடலை வளைத்து வணங்கலாம்.
3. திருப்பொருளை முத்தம் செய்வதற்குப் பதிலாகச் சூழ்நிலைக்கு ஏற்ப, பொருளைக் கைகளால் தொட்டுக் கண்களிலோ அல்லது நெற்றியிலோ ஒற்றிக் கொள்ளலாம்.
4. சமாதான முத்தத்திற்குப் பதிலாகக் கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தலாம்.
5. தூபத்தை அதிகமாக வழிபாட்டில் பயன்படுத்தலாம். கைப்பிடியுள்ள கிண்ணம் போன்ற கலத்தைத் தூபத்திற்காகப் பயன்படுத்தலாம்.
6. மெழுகுதிரிகளுக்குப் பதிலாக எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தலாம்.
7. நம்பிக்கையாளர்களின் மன்றாட்டில் செபங்களின் அமைப்பும், கருத்துக்களை வெளியிடுவதும், மக்கள், இடம் இவற்றிற்குத் தகுந்தாற்போல் மாற்றம் பெறலாம்.
8. நற்கருணை வழிபாட்டின் முடிவில் மலர்கள், சாம்பிராணி, விளக்கு இவை கொண்டு அஞ்சலி எடுப்பது இடம்பெறலாம்.
9. இறைமக்கள் தகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் நின்றுகொண்டு நற்கருணை வாங்கலாம்.

**தமிழக ஆயர்கள் அனுமதி அளிக்காத மற்ற மூன்று அம்சங்கள்.**

1. போர்வை (Shawl) போன்ற மேலாடையும் தோள்துகில் (Stole) போன்ற அங்கவஸ்திரம் அணிந்துகொண்டு, (தரையில்) அமர்ந்து திருப்பலி நிறைவேற்றுதல்.
2. திருமேனித் துகிலுக்குப் (Corporal) பதிலாக பித்தளை தாம்பூலத் தட்டைப் பயன்படுத்துதல்.
3. உடலின் ஐந்து அங்கங்கள் தரையைத் தொடுமாறு “பஞ்சாங்கப்பிரணாமம்” செய்தல்.

### 9. திருவழிபாட்டு அடையாளங்களும் கலைச்சொற்களும்

**“உங்களிடையே நான் கொண்டிருந்த மன உறுதி, நான் செய்த அரும் அடையாளங்கள், அருஞ்செயல்கள், வல்ல செயல்கள் ஆகியவையே ஒரு திருத்தூதருக்குரிய அறிகுறிகள்” (2 கொரி 12:12).**

**(490) 9.1 அடையாளங்களும் அதன் பொருளும்**

தண்ணீர் - வாழ்வின் அடையாளம்
ஓய்வு நாள் - ஆண்டவரின் நாள்
கோவில் - இறைவனின் இல்லம், புனித இடம்
கைகளைக் குவித்தல் - இறைவேண்டலின் அடையாளம்
சொல் (செபங்கள்) - புகழ்ச்சி, மன்றாட்டுகளின் அடையாளம்
ஒன்றுகூடல் - ஒரே நம்பிக்கையை வெளிப்படுத்தும் அடையாளம்
பாடல் - புகழ்ச்சி, நன்றி, மன்னிப்பு ஆகியவற்றின் அடையாளம்
மார்பில் பிழைதட்டுதல் - மனவருத்தத்தின் அடையாளம்
பணிந்து வணங்குதல் (முழந்தாளிடுதல்) - ஆராதனை, வணக்கம் செலுத்துவதன் அடையாளம்
நிற்றல் - எதிர்பார்த்துக் காத்திருத்தலின் மரியாதையின் அடையாளம்
அமர்தல் - கூர்ந்து கவனித்தல், தியானத்தின் அடையாளம்
சிரம் தாழ்த்துதல் - பணிவின் அடையாளம்
உண்ணா நோன்பு - தவத்தின் அடையாளம்
தைலம் பூசுதல் - அருள்பொழிவின் அடையாளம்
உடன்படிக்கை - ஒப்பந்தத்தின் அடையாளம்
சாம்பல் - தவத்தின் அடையாளம்
தீர்த்தம் - தூய்மைப்படுத்துதல், ஆசீர் அளிப்பதன் அடையாளம்
அமைதி - தனி இறைவேண்டலின்/ தியானத்தின் அடையாளம

**(491) 9.2 அருளடையாளங்களில் அடையாளங்கள்**

**9.2.1 திருமுழுக்கு**

தண்ணீர் - புது வாழ்வின் அடையாளம்.
ஆயத்த எண்ணெய் பூசுதல் - பேயை ஓட்டி, வலிமை அளித்தல்.
சாத்தானை மறுதலித்தல் - பாவம், தீமை, தீய நாட்டம் ஆகிய அனைத்தையும் துறக்க விருப்புவதன் அடையாளம்.
நம்பிக்கை அறிக்கையிடல் - மூவொரு இறைவனை வெளிப்படையாக அறிக்கையிட்டு, ஏற்றுக்கொள்வதன் அடையாளம்.
சடங்குக் குளியல் - திருமுழுக்கின் அடையாளம், பாவம் போக்கப்படுவதன் அடையாளம்.
மூழ்கி எழுதல் - இறப்பிலிருந்து உயிர்த்தெழுதலுக்கும், பழைய வாழ்விலிருந்து புதிய வாழ்வுக்கும் கடந்து செல்வதன் அடையாளம்.
திருத்தைலம் பூசுதல் - அருள்பொழிவின் அடையாளம்.
பாஸ்கா திரி - ஒளியாம் கிறிஸ்துவின் அடையாளம்.
எரியும் திரி - பாவ இருள் நீங்கி, அருள் ஒளி பெற்ற ஆன்மாவின் அடையாளம்.
வெள்ளைத் துணி - கிறிஸ்தவ மேன்மையின் அடையாளம்.
எப்பேத்தா சடங்கு - இறைவார்த்தையைக் கேட்டு, அறிவிக்க அழைக்கப்படுவதன் அடையாளம்.

**9.2.2. உறுதிப்பூசுதல்**

“தலைமீது கைகளை வைத்தல்” (Imposition of hands) தூய ஆவியாரையும் அவரது கொடைகளையும் வழங்குவதன் அடையாளம்.

**9.2.3 நற்கருணைக் கொண்டாட்டம் (திருப்பலி)**

1. பலிப் பீடம் - பலியிடும் இடத்தின் அடையாளம்
2. அப்பம் - கிறிஸ்துவின் உடல் (ஆன்ம உணவு)
3. இரசம் - மகிழ்வின் அடையாளம், கிறிஸ்துவின் திருஇரத்தம்
4. காணிக்கை – தற்கையளிப்பின் அடையாளம்
5. நற்கருணை மன்றாட்டு - இறைப்புகழ்ச்சி, நன்றியின் அடையாளம் (Berakah)
6. அப்பம் பிடுதல் - பகிர்வின் அடையாளம்
7. சமாதானம் கூறுதல் - ஒப்புரவின் அடையாளம்

**9.2.4 ஒப்புரவு**

1. பாவ அறிக்கையிடல் - மனமாற்றத்தின் அடையாளம், இறைவன்முன் பாவி என ஏற்றுக்கொள்ளல்.
2. பாவ மன்னிப்பு ஆசி – பாவங்களிலிருந்து விடுதலை அளிப்பதன் அடையாளம்.

**9.2.5 நோயில்பூசுதல்**

1. எண்ணெய் பூசுதல் - நலமளிப்பது, வலிமை ஊட்டுவதன் அடையாளம்.

**9.2.6 குருத்துவம்**

1. “கைகளை வைத்து வேண்டல்” – தூய ஆவியாரை வழங்குவதன் அடையாளம்.
2. திரு உடை அணிவித்தல் - திருப்பணி நிலை அடையாளம்.
3. புதிய ஆயருக்கு மோதிரம் - நம்பிக்கை முத்திரையின் அடையாளம்.
4. தலைச்சீரா – புனிதத்தின் / அதிகாரத்தின் அடையாளம்
5. செங்கோல் - வழிநடத்தும் பணியின் அடையாளம்
6. இருக்கையில் அமரச் செய்தல் - மறைமாவட்டத்தின் பொறுப்பை ஏற்பதன் அடையாளம்.
7. ஆயர்களின் சமாதான முத்தம் - மகிழ்ச்சி, ஒன்றிப்பின் அடையாளம்
8. கைகளில் திருத்தைலம் பூசுதல் (அருள்பணியாளர்களுக்கு) – திருப்பலி நிறைவேற்றுமாறு புனிதப்படுத்துதல்
9. தலையில் திருத்தைலம் பூசுதல் (ஆயர்களுக்கு) – அருள்பொழிவின் அடையாளம்.

**9.2.7 திருமணம்**

1. திருமண வாக்குறுதி – மன ஒப்புதலை வெளிப்படுத்துதலின் அடையாளம்
2. தாலி, மோதிரம், மாலை – மண ஒப்புதல் அளிக்கப்பட்டதன் வெளி அடையாளங்கள்
3. கைகளை இணைத்துப் பிடித்தல் - ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்வதன் அடையாளம்
4. திருமண ஆசியளித்தல் - மணமக்களுக்கு இறைவன் வழங்கும் நிறைவான ஆசியின் வெளி அடையாளம்

**492.9.3. சின்னமும் அதன் பொருளும்**

1. செம்மறி - இயேசுக்கிறிஸ்து 2. மாடப்புறா – தூய ஆவி 3. பெலிக்கான் பறவை – நற்கருணை 4. செடி, கொடி – சமாதானம் 5. லீலி மலர் - கற்பு 6. ரோசா மலர் - அன்பு, அழகு 7. முடி – அரசத்தன்மை 8. கப்பல், படகு – திருச்சபை 9. நங்கூரம் - பற்றுறுதி 10. சிலுவை – நம்பிக்கை 11. இதயம் - இறை அன்பு 12. கோதுமைக் கதிர்கள், திராட்சைக் குலை – அப்பமும் இரசமும் 13. தென்னங்குருத்து – வெற்றி 14. மண்டை ஓடு - சாவு 15. மீன் - இயேசுக்கிறிஸ்து 16. திறவுகோல்கள் - திருத்தந்தையின் அதிகாரம்.

**493. 9.4 எழுத்துக்கள்**

A.M – Ave Maria (L) Hail Mary – மரியே வாழ்க
AMDG (L) – Ad Majorem Dei Gloriam ஆத் மயோரம் தேயி குளோரியாம். இறைவனின் அதிமிக மாட்சிக்காக
I.H.S – Iesus Humanorum Salvator இயேசு மானிடக் குலத்தின் மீட்பர்.
A.Q - Alpha-Omega: தொடக்கமும் முடிவும்-கிறிஸ்து
I.N.R.I. - Iesus Nazarenus Rex Judeorum ஏசுஸ் நசரேனுஸ் ரெக்ஸ் யூதேயாரும் நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்.

(முற்றும்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.185

## பேதுரு திருமுகங்கள்

உங்கள் விடைகளை ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 01 | | | 02 | | | 03 |
| 04 | ❖ | ❖ | | 05 | ❖ | | ❖ | | |
| | 06 | | 07 | | | | | 08 | ❖ |
| 09 | | 10 | | | | ❖ | | ❖ | |
| 11 | | ❖ | | | 12 | | 13 | | |
| | | 14 | | ❖ | | 15 | | ❖ | 16 |
| 17 | 18 | | 19 | ❖ | 20 | | 21 | | ❖ |
| 22 | | | ❖ | | ❖ | | | ❖ | |
| | ❖ | ❖ | 23 | | | ❖ | | 24 | |
| | | 25 | ❖ | 26 | 27 | | 28 | ❖ | 29 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. யாரும் ----- எல்லாரும் ..................... மாற வேண்டுமென விரும்புகிறார்.
2. முற்காலத்தில் மக்களிடையே ................ இறைவாக்கினர் தோன்றினர்.
7. ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ................ ஆண்டுகள் போலவும் ----- இருக்கின்றன.
11. இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் ........... வாழ்கிறோம்.
12. ஆகவே கடவுளின் திருவுளப் .................. துன்பப்படுகிறவர்கள் ----- அவர் நம்பத்தக்கவர்.
13. கடவுள் சந்திக்க வரும் ........................ அவரைப் போற்றிப் புகழ்வார்கள்.
14. ................ மலையில் அவரோடு இருந்தபோது ------ நாங்களே கேட்டோம்.
20. இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் ................. அனைவருக்கும் அமைதி உரித்தாகுக.
22. நீங்களும் ----- ஆவிக்குரிய இல்லமாகக் .................. எழுப்பப்படுவீர்களாக.
23. நம் ஆண்டவரும் ----- உலகத்தின் அழிவு .......... களிலிருந்து தப்பினவர்கள் -------
24. அழிவு அவர்களுக்காக ...................... வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறது.
27. ஏனெனில் கடவுளின் மாட்சிமிக்க தூய ................ உங்கள்மேல் தங்கும்.

### வலமிருந்து இடம்

1. மண்ணுலகம் நீரிலிருந்தும் நீராலும் நிலைபெற்றிருந்தது என்பதை இவர்கள் வேண்டுமென்றே .................... விடுக்கிறார்கள்.
3. ஏனெனில் .................... செய்து துன்புறுவதைவிட, கடவுளுக்குத் திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதே மேல்.
7. கப்பதோக்கியா, ............. பித்தினியா ஆகிய நாடுகளில் சிதறுண்டு -----
8. ஏனெனில் எனது இக்கூடாரம் பிரிக்கப்படும் .......... விரைவில் வரும் என்பது எனக்குத் தெரியும்.
10. இப்போது ------ அந்நாளிலே ................ வகை கொள்வீர்கள்.
12. பழிச்சொல்லுக்குப் ........... ச்சொல் கூறாதீர்கள்.
13. நல்வாழ்வை ............. அதை அடைவதிலே கருத்துக் கொள்க.
15. அவர்களது ....................... தங்கள் பொருட்டல்ல.
19. இவர்களது கண்கள் கற்பு நெறியிழந்த ............ களையே நாடுகின்றன.
24. உங்கள் மூதாதையரிடமிருந்து ----- கொடுக்கப்பட்ட ................. என்னவென்று உங்களுக்குத் தெரியும்.
25. நல்லுறவு கொண்டவர்களாய்க் ............. வகையில் முழு முயற்சி செய்யுங்கள்.
27. தீமைக்குப் பதில் ---- மாறாக ....... கூறுங்கள்.
28. இறைப்பற்றில்லாதோரும் ................. களும் தண்டனை பெறுவது திண்ணமன்றோ.

### மேலிருந்து கீழ்

2. அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து பஞ்சபூதங்கள் வெந்துருகிப் ................
3. தங்கள் சொந்த ............ நாட்டங்களுக்கேற்ப வாழ்ந்து உங்களை எள்ளி நகையாடுவர்.
5. மனித இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் ................ பெற்றெழுந்தார்.
6. .......... அழிந்துபோகாமல், எல்லாரும் மனம்மாற வேண்டுமென விரும்புகிறார்.
7. தலைமை ................... வெளிப்படும்போது அழியா மாட்சியுள்ள முடியைப் பெற்றுக்கொள்வீர்கள்.
11. நீங்கள் தூயவராயிருங்கள் ஏனெனில் .......... தூயவன்.
12. ஊதியத்திற்காகச் செய்யாமல் விருப்போடு .................. செய்யுங்கள்.
13. கடவுளின் .................. எதிர்பார்த்து அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும்.
14. உங்கள் நேர்மையான மனத்தைத் ................ எழுப்புகிறேன்.
15. தீய நாட்டத்தால் ----- இறைத்தன்மையில் .............. பெறுங்கள்.
17. இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்நம்பிக்கை உங்களுக்குப் ...................... மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும்.
21. உங்கள் ----- அவர் உங்கள் மேல் ................ கொண்டுள்ளார்.

### கீழிருந்து மேல்

4. கடவுளின் வார்த்தையால் ..............ப் பிறப்பு அடைந்துள்ளீர்கள்.
7. இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ................ மீட்பையும் பெறுகிறீர்கள்.
8. அந்த .................... யான மனிதர் ----- வேதனையுறச் செய்தன.
9. நீங்கள் அவரைப் பார்த்ததில்லை. எனினும் அவர்மீது ................ செலுத்துகிறீர்கள்.
10. பேச இயலாத கழுதை மனித முறையில் .............. அந்த ----- தடுத்தது.
12. உங்களை ஊக்குவிக்கவும் கடவுளுடைய மெய்யான அருளைப் பற்றிச் சான்று ......................வுமே எழுதினேன்.
13. வாழ்க்கையில் இன்பம் காணவும் ----- தம் ................. க் காத்துக் கொள்க.
15. நமக்கு அருளப்பட்ட ஞானத்தின் .............. இவ்வாறுதான் உங்களுக்கு எழுதியுள்ளார்.
16. கட்டுவோர் புறக்கணித்த ................ முதன்மையான மூலைக் கல்லாயிற்று.
18. ஆனால் ஆண்டவருடைய நாள் திருடனைப்போல ..............
26. உலகத்தின் அழிவு சக்தி களிலிருந்து தப்பினவர்கள் மீண்டும் அவற்றில் ............... அவற்றால் ----- கேடுள்ளதாயிருக்கும்
28. வஞ்சகமற்ற வார்த்தையாகிய .............. அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள்.
29.............அவர்களுக்காக விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 183 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
து. நிலோஜினி,
செட்டிகுளம், வவுனியா.



**இரண்டாம் பரிசு:**
S. டிவைனி,
சாவற்கட்டு,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
சு. அனுஜன்,
உயிலங்குளம்,
மன்னார்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர். சரியான விடைகளை எழுதியோர் 68 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 183ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. K. அபியாஸ், மடுக்கரை, நானாட்டான்.
2. N. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
3. S. வரதன் குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
4. நோ. டினோயா மேரி, கங்கன்குளம், செட்டிகுளம்.
5. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
6. கி. தர்மசீலி, பெரியதம்பனை, மன்னார்.
7. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம்,
8. M. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
9. K. மடோனா, சிதம்பரபுரம், ஆசிக்குளம்.
10. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
11. கு. டினோஷன் சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
12. K. டொறிஸ்மீனா, நாச்சிக்குடா.
13. S. ஜெபறாஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
14. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
15. S. சாள்ஸ் அன்ரனி, தாமரைக்குளம், அடம்பன்.
16. J. ஆதனா, சாளம்பன், ஆண்டாங்குளம்.
17. I. இருதயமேரி, சிதம்பரபுரம், ஆசிக்குளம்.
18. N. சுலைக்ஷனா குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
19. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
20. A. J. ஆன் டனியலா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
21. S. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
22. ரவீந்திரன் ஜெனிவட், தலைமன்னார் கிராமம்,
23. G. வசந்தகலா, சாந்திபுரம், மன்னார்.
24. J. ஜோண் சந்தனறாஜ், தோமஸ்புரி, வங்காலை.
25. நி. மரிய யோண்சி லெம்பேட், பெரியபண்டிவிரிச்சான்.
26. S. ஜோசப் நிசாந்தன், முருங்கன்கமம், முருங்கன்.
27. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
28. நி. டேனியல், குடியிருப்பு, செட்டிக்குளம்.
29. யோ. மேரி அனுசியா, மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்.
30. கெ. சுவீற்வுன் சுமித், பொன்தீவுகண்டல்.
31. அ. விபுஷிகன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
32. கமங்களா அல்போன்சஸ், பெற்றா, மன்னார்.
33. அ. நிலாமதி, ஆத்திக்குழி, முருங்கன்.
34. அ. மேரி றொக்சன், புதுக்கமம், உயிலங்குளம்.
35. கு. ஆன் டிலுக்சிக்கா, திருக்கேதீஸ்வரம்.
36. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.
37. அ. மெர்லின், பொன்தீவு கண்டல், முருங்கன்.
38. பி. அ. விதுஷா, கொக்குப்படையான், சிலாவத்துறை.
39. வயலட்ஜோன், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
40. ம. ஜெனிற்றா, உக்குளாங்குளம், வவுனியா.
41. திருமதி. ஜா. தாசன், தாஸ்கோட்டம், வேப்பங்குளம்.
42. ஞா. அல்பேட், பாலையூற்று, திருகோணமலை.
43. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
44. ரீட்டா மேரி, திருக்குடும்ப க. மடம், பறப்பாங்கண்டல்.
45. அ. இனற் றுக்சனா, சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
46. அ. கெனீஷியா, காத்தாங்குளம், வட்டக்கண்டல்.
47. S. தர்ஷினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
48. ஜெ. டிலைக்சனா, புதுக்கமம், உயிலங்குளம்.
49. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
50. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி, மன்னார்.

## மடுத்திருப்பதியில் இடம்பெற்ற ......

9ஆம் பக்கத் தொடர்ச்சி

தியான இல்லத்திற்குச் செல்லும் பிரதான வீதியின் தொடக்கத்தில் வைத்து மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. அ. விக்ரர் சோசை, இலங்கை கத்தோலிக்க இளைஞர்களுக்கான தேசிய இயக்குனர் அருட்திரு. மல்கம் பெரேரா, மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணிகளுக்கான இயக்குனர் அருட்திரு. எஸ். ஜெயபாலன் மற்றும் இலங்கையின் பல்வேறு மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு இயக்குநர்கள் மாலை அணிவித்தும், மாநாட்டுப் பிரதிநிதிகளான இளைஞர்கள் மலர் வழங்கியும் தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தும் கோலாட்டம், குதிரையாட்டம் போன்றவற்றின் மூலமாகவும் மாநாட்டு மண்டபம்வரை அழைத்து வந்தனர்.

கத்தோலிக்க இளைஞர்களுக்கான தலைவர் யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தவிர்க்கமுடியாத காரணத்தில் இந்நிகழ்வில் சமூகமளிக்க முடியவில்லை. தொடர்ந்து கலைபண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

25ம் திகதி சிறப்பு விழிப்புணர்வு வலுவூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அன்றைய தினம் மாலையில் முத்தரிப்புத்துறைப் பங்கிற்கு சென்ற இவர்கள் அங்கு சிறப்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின்னர் இரவு மடு திரும்பினர். 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வங்காலை தூய அன்னம்மாள் ஆலயத்தில் மேதகு கிங்சிலி ஆண்டகை தலைமையில் சிறப்புத் திருப்பலி இடம்பெற்றது. இத்திருப்பலியுடன் இந்த மாநாட்டு நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன.

## பாராமுகமாக இருப்பதே ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொருவரும் சமூகத்தில் பயனுடையவர்களே. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு உகந்த வகையில் இறைவன் கொடைகளை வழங்கியுள்ளதால் அவற்றைப் புதைத்துவைக்காமல் மற்றவர்களுடன் பகிர்வதன் வழியே அவற்றைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

ஏழைகளைப் பராமரிப்பது என் பணியல்ல அது சமூகத்தின் கடமை என்று எண்ணி பாராமுகமாகச் செயல்படுவதும் பாவமே என்று தன் மறையுரையில் கூறிய திருத்தந்தை, தீமைகளைக் கடிந்துகொள்வது மட்டும் போதாது மாறாக நல்லவற்றை ஆற்றுவதும் அவசியம் என்று மேலும் கூறினார்.

அன்றைய திருப்பலிக்குப்பின் வத்திக்கானிலுள்ள அருளாளர் திருத்தந்தை 6ஆம் போல் அரங்கத்தில், ஏறத்தாழ 1,500 வறியோருடன் இணைந்து திருத்தந்தை மதிய உணவருந்தினார். உலக வறியோர் நாளை முன்னிட்டு உரோம் நகருக்கு வருகைதந்த அனைத்து வறியோருக்கும் பல்வேறு கத்தோலிக்க கல்லூரிகளிலும் நிறுவனங்களிலும் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அருளாளர் திருத்தந்தை 6ஆம் போல் அரங்கத்தில் வறியோருடன் இணைந்து மதிய உணவருந்துமுன் அவர்களுடன் இணைந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிறர்மீது நட்புணர்வையும் நல்லெண்ணங்களையும் இதயம் முழுவதும் சுமந்து செல்வோம் இந்த உணவைத் தயாரித்தவர்களையும் நம் குடும்பங்களையும் இறைவன் ஆசீர்வதிக்கட்டும் என்று செபிக்கவும் செய்தார். இந்நாளின் நற்செய்தி வாசகம் எடுத்துரைத்த தாலந்து உவமையுடன் ஏழைகள்மீது நாம் காட்டும் அக்கறையைத் தொடர்புபடுத்தி கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29-07-1988 — உதிர்வு 30-12-2013

### செல்வன். ஜேம்ஸ் பின்ரன் சுதர்சன்

(Manager of Abans - Mannar Branch)
(எழுத்தூர், மன்னார்)

ஆண்டுகள் நான்கு உருண்டோடினாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்!
என்றும் உம் அன்பிற்காய்
காத்திருக்கும் எம் உறவின் நெஞ்சங்கள்
உம்மை எண்ணா நேரமில்லை,
எங்கு சென்றாலும் உம்மைப்பற்றி
சொல்லாப்பொழுதுமில்லை!
என்றும் எம் செபத்துடன்
திருமகனின் திருப்பதியில்
இறை உறவில் நீர் துயில் கொள்வீராக.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16-11-1954 — உதிர்வு 27-12-2016

### திரு. லோறன்ஸ் கொன்சால் லேயம்

(தலைமன்னார், கிராமம்)

காலத்தின் விலைக்குள்
உம் உயிர் சிக்கியதேனோ?
நேற்று எங்களோடு சுவாசித்த
சந்தோசக் காற்று மாறுவதற்குள்
உம் வாழ்வு நொடிப்பொழுதில்
முடியுமென்று
எண்ணிப் பார்க்க முடியவில்லை!

சுற்றம் கலந்து அன்புடன் வாழ்ந்து
இன்றேனோ பிரிந்து சென்றீர்?
காற்றில் கலந்த மூச்சு
இறைபதம் சென்றடைய
பிரார்த்திக்கின்றோம் நாமே...!

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23-06-1943 — உதிர்வு 11-12-2015

### திரு. K. பிரான்சிஸ் கிருபைநாயகம்

(இலந்தைவான், அடம்பன்)

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ.11:25-26)*

அருமை அப்பாவே!
இரு ஆண்டுகள் கடந்தும் உம் நினைவு
எம்மைவிட்டு நீங்கவில்லையே!
உம் பிரிவால் துயருறுகின்றோம் நாம்.
உம் அன்பும் பண்பும் எம்மைவிட்டு என்றும் நீங்கவில்லை.
நூற்றாண்டு கடந்தாலும்
உம் நினைவுகள் எம்முடன் வாழும்.
எம்மைவிட்டு நீங்கிவிட்ட அன்புத் தந்தாய்...!
உம் ஆன்ம இளைப்பாற்றிக்காய்
அனுதினமும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை......

**8ஆம் பக்கத் தொடர்ச்சி**

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவற சபைகளின் பிரதிநிதிகள், பொதுநிலைப் பிரதிநிதிகள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், யாழ் மறைமாவட்டக் குருக்கள், ஆயரின் நெருங்கிய உறவினர்கள் எனப் பலதரப்பினரும் பங்கேற்றனர்.

பொன்விழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. அ. விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். அவரோடு யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. யோசப் ஜெபரெட்னம், மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை ஆகியோரும் இணைந்துகொண்டனர். ஓய்வுநிலை ஆயர் யோசேப்பு ஆண்டகையும், அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் இத்திருப்பலியின்போது பிரசன்னமாயிருந்தனர்.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி நெடுந்தீவில் பிறந்த ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாண மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 2 வருடங்களாக யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் ஒரு குருவாகப் பணியாற்றிக்கொண்டிருந்த நிலையில் 1992ஆம் ஆண்டு யூலை மாதம் 6ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் நியமிக்கப்பட்டார். 1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி மடுத்திருப்பதியில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு கடந்த 23 வருடங்களாக மன்னார் ஆயராகப் பணிபுரிந்தார். 75 வயதை அடைந்த நிலையிலும், கடுமையான நோய்வாய்ப்பட்ட நிலையிலும் 2016ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி தன் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

ஆயர் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தினதும் உலகெங்கும்வாழ் தமிழ் மக்களினதும் பொன்விழா நல்வாழ்த்துக்களை மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. ஆயர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் எம்மோடு இருந்து எமக்காகச் செபிக்கவேண்டுமென ஆசிக்கின்றோம், இறையருள் வேண்டுகின்றோம்.

## மன்னா விநியோகஸ்தர்களுக்கு நன்றி நவில்கின்றோம்!




- உங்கள் கைமாறு கருதாத் தாராள பணியினால்தான் மன்னா பத்திரிகை மக்களைப் போய்ச் சேருகின்றது.
உங்கள் மேலான பணிக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.
- இறைவன்தாமே உங்கள் இறைபணிக்கு கைமாறு தருவார்!
- பிறக்கவிருக்கின்ற புதிய ஆண்டிலும் உங்கள் நற்பணியைத் தொடர வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். - **மன்னா ஆசிரியர்**

## மன்னார் மறை மாவட்ட முதியோர் சங்கங்களின் சமாச உறுப்பினர்களின் ஆன்மீக யாத்திரை



மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாச உறுப்பினர்களாகிய நாம் ஓர் ஆன்மீக யாத்திரையை அண்மையில் மேற்கொண்டோம். கடந்த செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.15 மணியளவில் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து எங்கள் ஆன்மீக யாத்திரையை ஆரம்பித்தோம்.

இந்த யாத்திரையில் ஆண்களும் பெண்களுமாக மறைமாவட்ட முதியோர் சங்கங்களில் இருந்து 54 உறுப்பினர்கள் பங்குபற்றினார்கள். சமாசத்தின் இயக்குனர் அருட்பணியாளர் அல்பன் இராஜசிங்கம் (அமதி) அடிகளாரின் நெறிப்படுத்தலும் வழிகாட்டலும் இப்பயணத்தின்போது எமக்கு மிகவும் பேருதவியாக இருந்தது. இந்த ஆன்மீக யாத்திரையில் இருட்சகோதரி எல்சி அவர்களும் எங்களுடன் இணைந்துகொண்டார்கள்.

இறைவன் அருளால் எதுவித இடைஞ்சல்களும் இன்றி அன்றைய இரவு 8.15 மணியளவில் தலவில் புனித அன்னமாள் ஆலயத்தை அடைந்தோம். முன்கூட்டியே தலவில்லு பங்குந்தை அருட்பணியாளர் அலஸ் அடிகளார் ஒழுங்குபடுத்திய இரவு உணவுகளையும் வசதியான படுக்கைகளையும் அங்கு பெற்றுக்கொண்டோம்.

16.09.2017 சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் இயக்குனருடன் திருப்பலியில் பங்கெடுத்தபின் காலை உணவை முடித்துக்கொண்டு சீதுவையை நோக்கிப் புறப்பட்டோம். பகல் 12.30 மணியளவில் சீதுவையை அடைந்தோம். எங்களை வரவேற்பதுபோல் இலோசான மழை பெய்துகொண்டிருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொருவரும் உணவுப் பார்சலுடன் அழகிய சிலுவையை பார்வையிட்டோம்.

அவ்விடத்தில் மதிய உணவை முடித்துக்கொண்டு பகல் 2.00 மணியளவில் நீர்கொழும்பில் உள்ள இலங்கையின் அதிபிரமாண்டமான இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தைப் பார்வையிட்டோம். பிற்பகல் 4.30 மணியளவில் யாத்திரையை தொடர்ந்தோம். இரவு 8.15 மணியளவில் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் உறைவிடமான கல்கமுவ நகரை அடைந்தோம். அங்கே எங்களுக்காகக் காத்திருப்பதைப்போல் கல்கமுவ பங்குதந்தை அருட்பணியாளர் அலெக்ஸ் அடிகளார் எங்களை அன்புடன் வரவேற்று இரவு உணவுகளையும் தந்து உறங்குவதற்கு இடங்களையும் ஒதுக்கித்தந்தார்.

17.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலைத் திருப்பலியில் இயக்குனர் அவர்களுடன் பங்குகொண்டோம். அதன்பின் காலை உணவை முடித்துக்கொண்டு காலை 10.00 மணியளவில் புனித யோசவ்வாஸ் அடிகளார் மறையுரை ஆற்றி பணியாற்றிய வாஹாக்கோட்டையை நோக்கி எங்களின் யாத்திரையை தொடர்ந்தோம். அவ்விடத்தைப் பார்வையிட்டபின் மதிய உணவை முடித்துக்கொண்டு பிற்பகல் 1.30 மணியளவில் மன்னாரை நோக்கிப் புறப்பட்டோம். பிற்பகல் 6.00 மணியளவில் மன்னாரை வந்தடைந்தோம்.

தகவல் : செயலாளர், முதியோர் சங்கங்களின் சமாசம்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவை
## உடனடியாக விநியோகியுங்கள்

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. முத்தையா சுப்பிரமணியம்**
**(லுபினாஸ்)**
(சின்னக்கடை, மன்னார்)
மலர்வு : 22 - 12 - 1938
உதிர்வு : 20 - 12 - 2014

"நான் இறந்தொழியேன், உயிர் வாழ்வேன், ஆண்டவரின் செயல்களை விரித்துரைப்பேன்.". (தி.பா.118:17)

பாசத்தை உம் வளர்ப்பில் கண்டோம்.
தியாகத்தை உம் செயலில் கண்டோம்.
மூன்று ஆண்டுகள் மறைந்து போய்விடினும்
ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில் அப்பா!

நீங்கள் தொலை தூரத்தில் அல்ல;
எம் விழி ஓரத்தில் இருக்கிறீர்கள்.
துயர் சுமந்து எமக்காய் திரியாகி ஒளி தந்தீர்
வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்குக் காட்டினீர்.

இன்று ஆயனில்லா ஆடுகள்போல் அந்தரிக்கின்றோம்
நித்தமும் உம் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
நித்தியமாய் நின் ஆன்மா இளைப்பாற
நித்தமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பி.பி. அந்தோனிப்பிள்ளை**
**(இளைப்பாறிய அதிபர்)**
(ஆத்திக்குளி, முருங்கன்)
மலர்வு : 27 - 03 - 1941
உதிர்வு : 11 - 12 - 2016

கூட நீர் இருந்தபோது
கவிதையால் வாழ்வு சொன்னீர்
கண் விழித்தெழுந்தபோது
எம் மனதிலே கவிதையானீர்
காற்றோடு கலந்து இன்று
ஆண்டொன்று ஆனதப்பா!

இனி யார் கவி கேட்டிடினும்
எம் செவிக்கினித்திடாது
தெகிட்டாத கவிச்சுரங்கம்
எமக்கெட்டாது போனதுவே
எம் சிந்தையின் வேதனையை
யாரிடம் சொல்வோமப்பா?

எமையெல்லாம் தவிக்கவிட்டு
தொலை தூரம் சென்றிடினும்
உயிர் வாழும் சொத்தாக
நீர் எமக்கு ஈந்திட்ட
அரிய நல்ல புத்தகங்கள்
உயிரோடு பேசுதப்பா
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் மனம்!



**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 05 1948



உதிர்வு 22 11 2016

**திருமதி. அ. அந்தோனிக்கம்**
**(கலாவதி)**
(பள்ளிமுனை, மன்னார்)

அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல்தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் ஒன்று ஆனதம்மா ஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து வளர்த்து
பாரினிலே உயரவைத்தீர்கள்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 27 06 1955



உதிர்வு 26 10 2017

**திருமதி. றொசாறி ஜெனிற்றா றோச்**
(பள்ளிமுனை, மன்னார்)

"நீரே என் புகலிடம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்" (தி.பா 9:12)

அன்பு முகம் மறைந்தாலும் அழியாது உம் நினைவுகள்!
ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய்ச் சுடுகிறதே
ஈரமாறாத் துயரத்தில் எம்மிதயம் கனக்கிறது
உங்கள் நினைவலைகள் எம் உயிரோடு உணர்வோடு
கலந்து இதயத்தில் என்றும் எம்மோடு வாழ்கின்றீர்கள்.
கண் முன்பே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முள்ளே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்.
வலிகளின் மத்தியிலும் உம் இனிய நினைவுகளை
இறுதி மூச்சுவரை எம்முள் காத்திடுவோம்.
அமைதியில் இளைப்பாறுங்கள்!

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 02 1955



உதிர்வு 09 01 2017

**திருமதி. எட்வேட் ஜோசபின் டயஸ்**
(பேசாலை, மன்னார்)

அம்மா, ஆண்டொன்று கடந்து சென்றாலும்,
எல்லார் வாயிலும் உங்களைப்பற்றியே பேச்சு
எங்கு பார்த்தாலும் உங்கள் உருவமாச்சு
எவர்க்கும் உதவுவதே உங்கள் இறுதி மூச்சு
இத்துணை நல்ல இதயம் இப்போ எங்கே போச்சு?

நீங்கள் காட்டிய நன்னெறி பயன் தரும் நிச்சயம்
நீங்கா உங்கள் நினைவுகள் எமை நடத்தும் சத்தியம்
உமைத்தந்த இறைவனுக்கு என்றென்றும் ஸ்துத்தியம்
உன்னதரின் திருமுன் நீங்கள் வாழ்வீகள் நித்தியம்

**பிரிவால் நினைந்துருகும்**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகேதரர்கள் மற்றும் உறவினர்கள்

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 08 1961



உதிர்வு 20 12 2013

**திருமதி. பிரகாசம் கிறேஸ்**
(உப தபாலதிபர், சூரியகட்டைக்காடு)

தாயில் இருந்துதானே - அம்மா
தலைமுறை தொடங்குகின்றது
தலைமுறைக்காய் எமை ஈன்று - நாம்
தத்தளிக்க மறைந்தாய் அம்மா.

பேரப் பிள்ளைகள் இன்று
பேசத்தொடங்கிடும்போது
பேத்தியாய் நீ மகிழ - கடவுள்
பேரன்பு காட்டவில்லையே அம்மா!

நாலு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்,
நாம் கொண்ட பாசம் இன்னும் நலியவில்லைத் தாயே
நாளாந்தம் செபிக்கின்றோம் நல்லடியாள் உங்களுக்காய்.

**பிரிவால் நினைந்துருகும் -**
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 04 1947



உதிர்வு 26 12 2013

**திருமதி. தாவிது அந்தோனியா**
**(பிலோமினா)**
(சிறுத்தோப்பு, பேசாலை)

இவர் திரு. ஜே. தாவிது (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதிகளான எஸ்.பி. சுகந்தி, எச். எம். வசந்தி, எஸ். இ. ஜெயந்தி, ஏ. கே. ஆனந்தி, எம். சகிலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. வ. சந்தியோகு ச. செபஸ்தியம்மா தம்பதிகளின் (கொவ்வங்குளம் நானாட்டான்) அன்பு மகளும் ஆவார்.
இவரின் ஆன்மா ஆண்டவரிடம் அமைதியடைய மன்றாடுவோமாக.

**பிரிவால் நினைந்துருகும் -**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 01 1962



உதிர்வு 02 01 2017

**திரு. சீ. மரியநாயகம்**
(நானாட்டான்)

அன்பிற்கு இலக்கணமான அப்பா!
ஆண்டு ஒன்று உருண்டோடினாலும்
ஒவ்வொரு நொடியும் உம்மை மறக்க முடியவில்லையே!
நித்தமும் எம்மை உம் சிறகுகளில் காத்தீர்.
திருச்சபையில், சமூகத்தில், குடும்பத்தில்
அயராது பணிகள் பல புரிந்திட்டீர்.
பாசத்தைமுழுமையாக எமக்குக் காட்டிச் சென்றீர்.
நெஞ்சம் துன்பத்தால் வெடித்து சிதறுதப்பா
இறைவனின் அழைப்பிற்கு நீர் இணங்கியே சென்றுவிட்டீர்.
விண்ணுலகில் நீர் அமைதிபெற்று வாழ்ந்திட
எம் செபத்தில் வேண்டுகிறோம் உம் ஆன்மா சாந்திபெற!

**பிரிவால் நினைந்துருகும்** - மனைவி, பிள்ளைகள், தாய், சகோதர சகோதரிகள், மாமி, மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள்.